[illegible]

V 4 X10 91 15 oct 1931

[illegible] 211, N28KN
M31·4·41
188939

836

KALANILAYAM

தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

OFFICE 7-NOV 1931

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 வது அக்டோபர் மீ 15உ [No. 41.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 801
2. ஆண்டாள்—(கோதையார் யௌவனமும் அவர் அனுபவமும்) E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 803
3. சிதம்பரதேவர் சரிதம். Dr. V. S. அருணாசலம்பிள்ளை 805
4. கந்தபுராணமும் சங்கதூல்களும். பண்டிதர் R. திம்மப்பா ஐயர் 807
5. கம்பராமாயணம் (பள்ளிபடைப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 810
6. களவியற் காரிகை S. வையாபுரிப்பிள்ளை B A. B.L. 812
7. யாப்பிலக்கணம் (வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா) 815
8. சூளாமணி - (மந்திரசாலைச் சருக்கம் 162 - 168) K. இராமநாதம் ஐயர் B A. 817
9. வர்த்தமானம். 819

கலாநிலயம்

புதியன பிதிரலாமே

செய்வதற்குரிய வொன்றினை விடுத்து மற்றைய வெல்லாம் பன்னிப் பன்னி என்செய்வோம்? என்செய்வோம் என்றுமக்களாயினோர் எற்றுக்கோ ஏங்குகின்றனர். பழையன கழித்துக்கழீத்துப் புதியனபுகுத்திப் பெற்ற பாக்கியங்கள் இவையெனப் பரந்திருந்த நாகரிகத்தின் வெற்றிக்கொடிகளெல்லாம் ஒன்றொன்றும் இன்று இற்று வீழ்கின்றன. பொதுஜன ஆட்சி என்றொருசொல் தறியிற்படு குழல்போல்வாய்க்குவாய் பாவியிருந்த பயனனைத்தும் வீணுயதை விளம்பற்கு தேயமில்லை. முன் ஆட்சியில் அவாவிவண்புதண்டபின் அதுஅரசன் ஒருவன்பால் இருந்ததல்லால் நாடனைத்தும் அந்தச் சூழ்ச்சி பரந்ததில்லை. ஆயிரம் அர்சர்களுக்கிடையே ஒரு தரியோதனன் இருப்பான்; ஆயிரம் அரசிகளுக்கிடையே ஒரு விலோகசி யிருப்பாள். அன்னர் ஆசையால்விளையும்தீமைகளனைத்தும் அவ்வரசஇனத்தார் தம்முளே நிகழ்ந்து முடிந்துவிடுமன்றிக்குடிகளைச் சென்றெரு குற்றமுங்கதுவக்காண்கிலம். இன்றைக் கோகுடிகளில் ஒவ்வொருவருக்கும் அவ்வாட்சியுரிமை உண்டென்ற உரையின் வஞ்சனையினுல் வீடுதோறும் சுயோதனர்களையும் கைகேசிமார்களையும் காலக்கூடிய நிலமைவந் தெய்தியது. மற்று, குடிகளே வருத்திய கொடுங்கோன் மன்னர் சிலர் இருந்திருப்பினும் இருக்கலாம். ஆயினும் என்? அவனுடைய கொடுமைக்குத் தூரத்தாலும் காலத்தாலும் எல்லையுளது. கடும்புலிதானும் காடுசென்றேனும் அவனுடைய கொடுமைக்குத்தினின்று தப்பலாம். அக்கொடுமையும் ஏகதேசமுள்ள ஆட்சியிலே தான் செல்லும். அதற்றன்றி ஒருயாட்சியை கொடுமை ஒரு காட்டினால் நாடுகளிலெல்லாம் எத்தனை பேரைச் சென்று எட்டமுடியும்? பொதுஜன ஆட்சியிலோ, ஆட்சிக்கு அவாவுவாரும் அவாவிப்பெற்ற ஆட்சியைச் செலுத்துவோரும் எத்தனிபோ பலராதலின் கொடுமையைக் கையாள வல்லவரும் எத்தனியே பலர் ஆகின்றனர். கொடுமை என்பது தெரிந்தே தான் செய்யப்படுவதாக இருக்கவேண்டியதில்லையே. அறியாமையும் வாழ்க்கையை அளவற்ற அல்லலுக்குட்படுத்த இயலும். மேலும் அறிவென்பது ஒன்றும் அரசன்பதவும் ஒன்று. மற்று அறிபாவிமையோ பலதாம். அதனுல் விளைகின்ற பாவக்கொடுமைகளும் விதம்பல வுடையன. எனின் அறிஞரேனும், அறவோரேனும் பதின்மர் சேர்ந்தக்கால் செல்லும் அறமும் அறிவும் ஒன்றேயன்றிப் பத்தன்று. அறிவிலார் திறத்திற்குரிய கணக்கோ, பெருக்கல்வாய்பாட்டிற்கு இணங்கிப் பெருகும். அறிவிலார் பதின்மர்கூடி ஒரு கருமத்தை ஆற்றினுல் அதனுல்வரும் கேடு பதின்மடங்கு. அறனிலார் பதின்மர் புரியும் பாவங்கள் அவர் கருமத்தைப் பத்துவிதங்களில் கெடுக்கு மென்பது கணித வுண்மை.

எனின். ஆள்வோன் ஒருவன் நல்லவனுயின் அவனுல் வரும் நலத்திற்குமேல் நல்லவர் ஆயிரம்பேர் சேர்ந்தும் நல்கமுடியாது. மற்றுங் கொடியோன் ஒருவன் ஆள்வதைக்காட்டிலும் ஆயிரம் கொடியோர் ஆயிரம் மடங்கு துன்பத்தைச் செய்தலுக்கும் சக்தியுடையவர்களாகின்றனர். இது நிச்சயமென்பதைப் பொதுஜன ஆட்சி நிலவிறந்த நாடுகளிலெல்லாம் இன்றைக்கு ஒன்றே போதின்றிக் காணலாமே. இப் பொதுஜன ஆட்சியில் நடைபெட்டவர்களில் யார் வாழ்ந்தார், யாரை வாழவைத்தார். முன் சுகம் என்பதைச் சொப்பனத்

188929

திலும் காணலரிது என்றால் இப் பொதுஜனவாட்சி முறைமைக்கு இன்றியமையாத அல்லல்களுக்கும் ஆரவாரங்களுக்கும் கவலைகளுக்குமிடையே அக்கன விற்குக்களைப நித்திரையே மனிதருக்குள் அரிதாகி விட்டதே. நித்திரையால் தம்துயர்களைச் சற்றே மறந் திருக்கமாட்டாமையால் அவைகளுக்கஞ்சி ஜனங் கள் நாடகசாலைகளிலும் களியாட்டிடங்களிலும் சென் றெளிந்துகொள்வதைச் சிலர் தற்கால நாகரிகச் சுக வாழ்க்கையின் சின்னங்களென்று சிந்தித்த பேதை களாய்த்திரிகின்றனர்.

அரசனுல் நியமிக்கப்பெற்ற அதிகாரிகள் கொடிய வர்கள் ஆவது போன்றே பொதுஜனவாட்சி முறைத் குட்பட்ட அதிகாரிகளும் அறனில்லாப் பேயர்களாய் இருப்பதற்கு இடையூறு ஏதுளது. அவர்களோடி வீனையவர்களும் ஒத்த இனத்தவராகின்றார். எது எவ் வாறுயினும் வர்த்தகச்செல்வமும் மற்றுள கலங்களும் தம் மூரிமையை நிலைக்கின்ற எண்ணத்தால் பெருமை நிறைந்து திகழ்கின்ற மனத்தினது மாண்பும் இவை யனைய பல ஹதியங்களும் பொதுஜன ஆட்சிமுறை யால் உண்டாகுமென்று கற்றவர் என்னும் பேரிருர் தும் பாமரர்க்கு நிகராக விவகரிக்கின்ற மக்கள் உண் மையை உணரும் அறிவுதான் இலரோ, அறிந்தும் இப் பொதுஜன ஊடாட்டங்களால் தமக்குப் பேரும் புகழும் பொருளும் கிடைக்கின்ற பல இலாபங்களைக் கருதி மறைத்துவிடுகின்ற பொய்யர்களோ என்று வியக்குங்கால், இருதிறத்தாரும் இருக்கலாம் என் னும் எண்ணம் வலிவடைகின்றது. பொதுஜன ஆட் சிக்கொடி விண்ணுற ஓங்கிபாடும் நாடு அமெரிக்க நாடு. அந்த நாட்டினைப்பற்றி தெய்வீக அறிவுவாய்ந்த (Walt Whitman) வால்ட்விட்மன் என்னும் ஒரு அமெரிக்கரே கூறுவதை மீண்டும் இங்கு இங்காள் நாம் நினைவில் கொள்வதால் உறுதி பெரிதுண்டெனக் கருதி அதனை ஈண்டு வரைகின்றோம்.

"முழு விடுதலையடைந்த அரசியல் முறைகளும், புத்தி சாதுர்யமும், வர்த்தக கைத்தொழில் வளர்ச்சியும், செல்வப்பெருக்கும், வறுமையின்மையும், கலகக்குழப்பங் கள் இல்லாமையும், ஆகிய இவைகளும் இவைகள்போ ன்ற வேறு சில விஷயங்களும் தம்மளவில், பொதுஜன வாக்குரிமையாட்சி நற்பயன் அளித்ததென்னற்குத் தக்க சான்றுக ளாகமாட்டாவென்பதை மறக்கீராயின் குடி கெட்டுப் போகுமே. முன்குறித்த இக்கலங்களெல்லாம் இருந்தும், இவ்வமரிக்க தேயத்தின் ஜனவாழ்க்கையோ பினவைகோய் பெரிதுகொண்டு அழுகிக் கெடுகின்றது. அரசியல் துறைகளில் ஊடாடும் வாழ்க்கை, மக்களோடு மக்கள் உறவாடும் வாழ்க்கை, என்னுமிவ் விருவகை வாழ்க்கைகளும் இங்கு அழுகல்களே. மனிதவாழ்க்கைக்கே னும் அரசியல் முறைகளுக்கேனும் முதுகெலும்பு போன் றுநின்று தன்னிலேதளராமல் காக்கின்ற தருமசிந்தனை என்பது இங்கு இல்லாமலே போயிற்றே, அல்லது அடியோடு தளர்ந்தழிந்து கிடக்கின்றதோ, யாவதாயி னும் தருமசிந்தனை என்னும் அம்சம் யாரிடத்தும் தலை யெடுக்கக் காண்கிலேன்.

"ஆழ்ந்த நோயொன்றை அறிய முயலுமொரு வைத் தியன்போல் நாம் இக் கால தேய வர்த்தமானங்களின் முகத்தினைக் கூசாது நோக்குதல் வேண்டும். இன்றைக்கு இவ்வமரிக்காவில்இருப்பதுபோல் இதயமானது வறண்ட தோர் வெறுங் கூண்டாய் என்றைக்கும் எத்தேயத்திலும் இருந்ததில்லை. உண்மையான நம்பிக்கை கம்மைவிட்டுப் போய்விட்டது. நாம் கூக்குரலிட்டும் ஆடிக் குதித்தும் பாராட்டிக் கொண்டாடுகின்றவைகளாய்ப் பாவிக்கின்ற நமது அரசியல்முறைகளே உண்மையாக நம்புகின்றவர் கள் நம்மில் யாரேனு முளரோ. மன்பதைத் தொகுதியி லும் நம்பிக்கை இல்லை. இவைகளிற் பெருநம்பிக்கை யுள்ளவர்போன்று எல்லாரும் நடிக்கின்றார். எனின், கூரிய பார்வையுடையார் கண்களுக்குமுன் இவ்வேஷம் சிறிதும் நில்லாது. பொய்வேடத் தோலங்கொண்டு கபட நாடகங்கள் ஆவதே யாவர்க்கும் கடனுயிற்று. ஆடவர் பெண்டிரை நம்புவதில்லை; பெண்களும் ஆடவர்களை நம்புவதில்லை. இறுமாப்பால் இயம்புகின்ற சொற்க ளல் லாமல் இலக்கியமென் றுரைப்பதற்கியன்றது ஒன்றுகூட இன்று காணலரிது. சமயக் குழப்பங்களும் மடங்களும் இப்பொழுது தெய்வமதம் என்ற பேரால் முழக்குகின் றன. வீண்வம்பு வளர்ப்பதன்றி உரையடி மகிழ்வார் ஒருவரில்லை. மோசமே செய்கைக்கெல்லாம் இங்கு மூலமாகின்றது. மோச எண்ணமே வாழ்க்கையின் மூல மாயின், அதனின்று பிறக்கின்ற கொடுமைகள் கணக் கிற் கடங்குமோ. நம் வர்த்தகச் மோன்களென்று முழங் குவோர் தொகுதியெல்லாம் எத்தனை இழுக்கிடக்கின் றனர் என்பதை எண்ணவெண்ணப் பின்னும் பின்னும் அன்னர் இழிதகைத் தோற்றமே எங்குந் தென்படுகின் றது. உத்தியோகங்களோ, பொய்யிலும் வஞ்சனையிலும் இலஞ்சத்திலும் மோசத்திலும் தீமையிலும் தோய்ந்து கிடக்கின்றன. நீதிஸ்தல அதிகாரிகளும் மாசற்றவர்க ளென்பதற்கில்லை. பெரிய நகரங்களில், கௌரவமாகச் சிலரும் அகௌரவமாகச் சிலரும் ஒருவரையொருவர் கொள்ளையடித்துவரும் அயோக்கியர்களாகவே அனைவ ரும் இருக்கின்றனர். நாகரிகமாக வாழ்வதாகப் பே வைத்துக்கொண் டிருக்கின்றவர்தம் இனத்தினை நுணி த்து நோக்கினுல், அற்பத்தனமும் காமமும் தாழ்ந்த ஆசைகளுமே காணப்படுகின்றன. வீண்காலத்தைக் கொல்லுவ தெப்படியென்னும் கலையே அவர்களைச் சுழற்றிவைக்கின்றது. வியாபார விவகாரங்களில் — (எல்லாவற்றையும் விழுங்கிவிடும் பேய் ஒன்றிற்கு மற பேர் இந்த வியாபார விவகாரம் என்ற வார்த்தை)— பணலாப மொன்றே தனிநோக்க மாகின்றது. பெரிய மனிதர்கள் என்ற பேரோடு ஜனத்தொகையின் முன் னணி நிற்பவர் அனைவரும் உயர்ந்த உடையுடுத்த சிற் றினக் கயவர்களல்லால் வேறில்லை."

இங்கிலாந்தில் அரசரொருவர் இருப்பினும் ஜனங் களது ஆட்சிமுறை, ஜனங்களுக்காக, ஜனங்களினாலே யே நடத்தப்பெறுகின்றது என்னும் ஏமாப்பில் குறை வில்லையாதலின் அமெரிக்காவைப்பற்றி வால்ட் விட் மன் சொன்னது இங்கிலாந்திற்கும் பொருந்தும் வெகு தூரம் செல்லாதேன். இப்போது ஜனவாட்சிக்கு ஆவாவி முயலத் தலைப்பட்டநாள் முதற்கொண்டு இவ் விந்தியாவிலேயே அச்சொற்களுக்கு விரிவுரையும் உதாரணங்களும் காணலாமே. அரசியல்வாதிகள் இதற்கு என்ன பதில் சொல்கின்றார்கள் என்பது யாம் இதுகாறும் அறிந்ததில்லை. வித்தொன்று போடக் கனியொன்று ஈனும் என்னச் சிலர் அங்காந்திருக்க லாம். அன்னவரைக் கண்டு நாம் இரங்குவதன்முன் அக்கனியையேனும் சுயநயமின்றிப் பிறர்பொருட்டே எதிர்பார்த்திருக்கவேண்டும் என்ற நிச்சயம் நிலைக்கவேண்டுமே.

ஆண்டாள்

3. கோதையார் யௌவனமும் அவர் அனுபவமும்

[785-வது பக்கத் தொடர்ச்சி]

1. கோதையார் யௌவன பருவ வரலாற்றின் ஆராய்ச்சி.

கோதையார் பெதும்பைப் பருவங் கடக்கும்காலையில்

இக்கன்னிகைக்கு மணவாளனெருவனைத் தேடல் மிக அரிதாகத் தோன்றிய தென்றும், "மானிடவர்க் கென்று பேச்சுபடில் வாழகில்லேன்" என்று அந்த அம்மையார் தந்தைக்குக் கூறியதாகவும், பிறகு பற் பல திருக்கோயில்களில் எழுந்தருளி யிருக்கும் அர்ச்சாவதார மூர்த்திகளில் யாரை வேண்டுகின்ற ரெனத் தந்தை வினவ, திருவரங்கனையே தான் மணமகனுகக்கொள்ள ஆண்டாள் கருதினரென்றும், அதை வெளியிடவும் பெரியாழ்வார் இக்காரியம் எவ்வாறு சித்திக்குமென்று சிந்தை கலங்கியபோது அவர் கனவில் திருவரங்கச்செல்வனர் எழுந்தருளி "உமது புத்திரியை அணியரங்கத் திருமுற்றத்திற்குக் கொண்டுவாரும், நாம் தக்கபடி பாணிக்கிரஹணம் செய்வோம்" என்றுஅருளினரென்றும் இவ்வாழ்வார் வரலாற்றில் கூறுவர். திருவரங்கத்தினின்று அரங்க னுதர் கட்டளைப்படி சத்திரம் சாமரம் முதலிய வரி சைகள் வில்லிப்புத்தூருக்கு வந்ததென்றும், அவற் றை ஏற்றுப் பெரியாழ்வார் தன் மகளை ஒரு அழகிய பல்லக்கிலேற்றித் திருவரங்கம் சென்றதாயும் அவ் விடத்தில் மூலஸ்தானம் சென்று அம்மையார் மறைந் ததாயும், அக்காலந் தொடங்கிக் "கேசவ நம்பியைக் கால் பிடிக்கும் பெரும்பாக்கியம்" அவருக்கு நேர்ந்த தென்றும் குருபரம்பரை முதலிய பிரபந்தங்களாலறி யலாம். இது புராணக்கூற்று. ஆயினும் ஆண்டாள்மங் கைப்பருவம் வந்ததோ அல்லது வரவில்லையோ என்னு மக்காலத்திலேயே, பிராமண வழக்கப்படி வயதாகாக் கன்னிகைப் பருவத்திலேயே திருவரங்கச் செல்வனு ருக்கு மனையாள் ஆயினென்பது அகச்சான்றுகளுக் குப் பொருந்துமோ அல்லது ஆண்டாள் மடந்தைப் பருவமும் கடந்து பலகாள் உலகத்தில் தன் தந்தை போல் உலகப்பற்றுக்குக் கட்டுப்படாதவராய் உழைத் துப் பிறகு முத்திபெற்றனரோ என்பதை இக்காலத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சிகளுக்குப் பொருந்துமாறு காண்போம்.

அவ்வாறு நாம் செய்யப்புகுவதன் முன்னர் நமது சகோதரர்களான வைஷ்ணவ அறிஞர் முக்கியமாய்க் கவ னிக்க வேண்டியது ஒன்றுளது. அதாவது: புராணவர லாறுபோல் ஆண்டாள் சிறுவயதிலேயே பக்தியால் மூழ்கித் திருவரங்கத்து மூலஸ்தானத்தில்மறைந்தார் என்பதைவிட அவர் பலகாள் உலகிலிருந்து போகத் தில் வழுவாது விஷ்ணுசித்தரைப்போல் நடலைவாழ் வில் தாமும் கட்டுப்படாது, இதர மனிதர்களையும் அதில் விழாதிருக்கச் செய்து, உலக அநுபவம் சம்பூர ணமாய்ப் பெற்றவராகி, உலகத்திலுள்ள மக்கள் உய் யும்வண்ணம் திருப்பதிகங்களைப்பாடி, சமரச நிலையில் சன்மார்க்க வைணவத்தை நிலைநிறுத்தியவரில் முத லாவார் இவரே யென்றும், தன் தந்தையான பெரி யாழ்வார் விட்ட அங்கங்கள் யாவும் முற்றச் செய்தவ ரிவரேயென்றும் நாம்அறியக்கூடுமாயின் ஆண்டாளைப் புராணவரலாற்றில் காண்பதைக் காட்டிலும் பல்லாயிர மடங்கு விசேட வொளியில் காண்போ மென்று எண்ணுவது இன்றியமையாததன்றே? அத்தகைய அநுமானங்களையே ஆண்டாள் திருப்பாவையும், அவர்தம் பதினன்கு திருமொழிகளான திருப்பதிகங் களும் ஆங்காங்குத் தமது சொற்றொடர்களால் விள க்கா நிற்கும். அவற்றைக் காண்போம். கோதையார் மங்கைப்பருவம் கடந்தவரென்பது அவர்பதிகங்கள் சிலவற்றில் வெளிப்படையாய்க் காணலாகும்.

.....காமதேவ
அவரைப் பிராயம் தோடங்கி யென்றும்
ஆதரித் தேழுந்தவென் றடமூலைகள்*
திவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுது
வைத்தேன் ஒல்லே விதிக்கிற்றியே.
1-ம் திருமொழி 4.

எனப் பருவத்திற்குத் தக்க உருவம் காட்டப்படுவ தாலும், ஆங்காங்கு இவர் தம்மை வர்ணித்துக் கூறு மிடத்தும், ஆயச் சிறுமியென உருகப்படுத்தாவிடத் தெல்லாம் பெதும்பைப் பருவங் கடந்தவராகவே ஆண் டாள் காணப்படுகின்றார். இஃதன்றியும் தன்னை மடந் தையென்று ஒரு செய்யுளிற் கூறுவதால், அது அவர் தன்னை யறியாத தன்பருவத்தைக் குறிப்பதோர் மொழியென்றே அச்செய்யுளில் நாம் அனுமானிக்க வேண்டியதா யிருக்கின்றது,

விண்ணுற நீண்டடி தாவிய மைந்தனை
வேற்கண் மடந்தை விரும்பிக்
கண்ணுற வெங்கடல் வண்ணனைக் கூவுக
ருக்குயி லேயென்ற மாற்றம்
பண்ணுறு நான்மறை யோர்புது வைமன்னன்
பட்டர்பி ரான்கோதை சொன்ன
நண்ணுறு வாசக மாலிவல் லார்களோ
ராராய ணையவெண் பாரே.
5-ம் திருமொழி 11.

என இன்னவாறு தன்னை மடந்தையெனக் குறிப் பிட்டதுடன் நில்லாது, அத்திருமொழியிலே 6-வது செய்யுளில் தனது திருவுருவத்தின் இளமைப்பருவ அழகு கடந்ததெனக் காட்டும் சொற்றொடர்கள் பல வருவன காண்க:—

எத்திசை யும்மம ரர்பணிந் தேத்துமி
ருடிகே சன்வலி செய்ய
முத்தன்ன வெண்முறு வல்செய்ய வாயும்
முலையு மழகழிந் தேன்யான்
கொத்தலர் காவில் மணித்தடங் கண்படை
கொள்ளுமி ளங்குயி லேயென்
தத்துவ னேவரக் கூவிற்றி யாகில்
தலையல்லால் கைம்மாறி லேனே.
5-ம் திருமொழி - 6.

* இத்தகைய தொடர்மொழிகள் வரும் செய்யுட்கள் பல ஆண்டாள் பதிகங்களிற் காணலாம். தற்கால நாகரிகத்தில் இடக்கரென்று கருதப்படுவதால் இங்கு அப்பாக்களைப் பெரும்பாலும் மேற்கோளாகக் காட்டவில்லை.

மற்றும்,

ஒளிவண்ணம் வளைந்தை
உறக்கத்தோ டிவையெல்லாம்
எளிமையா லிட்டென்னை
யீடழியப் போயினவால்
குளிரருவி வேங்கடத்தென்
கோவிந்தன் குணம்பாடி
அளியத்த மேகங்காள்
ஆவிகாத் திருப்பீரே.

8-ம் திருமொழி - 3.

இவற்றை நோக்குங்கால் ஆண்டாள் பேரிளம்பெண் பருவத்தை யடைந்தவள்போலச் சில பதிகங்கள் பாடியிருக்கவேண்டுமென்று அநுமானிக்கவும் நேரும். 8-ம் திருமொழியில் மேகத்தை நோக்கி அகப்பொருளிலக்கணத்திற்கிணங்கிய காமரச உருவத்தில்காட்டும் தமது தத்துவ விளக்கத்தை மக்கள் எவ்வாறு கொள்ளுவாரோவென்றஞ்சி தேகமுற்றுத் தமது தந்தைக்கும் இரட்டுற மொழிவதுபோல் "போகத்தில் வழுவாத புதுவையார்கோன் கோதை" என்றுரைத்த சொற்றொடரின் பொருள்நயம் வியக்கத்தக்கதே:—

நாகத்தி னணையான நன்னுதலாள் நயந்துரைசெய்
மேகத்தை வேங்கடக்கோன் விடுதூதில் விண்ணப்பம்
போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதைதமிழ்
ஆகத்து வைத்துரைப்பா ரவரடியா ராகுவரே.

8-ம் திருமொழி 10.

சிற்றின்பசுகத்தை வெறுத்துவிட்டுக் கன்னிகையாய்க் காலங் கழித்தாராயினும், கன்னிகாமாடத்தில் அடைக்கப்பட்டு உலகம் இன்னதென்று ஆண்டாள் அறியாதவராய்க் காணப்படவில்லை. நடலை வாழ்விற் கட்டுப்பட்டு உலக சிற்றின்ப அனுபவங்கள் யாவும் அனுபவித்தவர் எழுதியதுபோல் அவர் எழுதிய கவிகள் அகப்பொருள் துறைகளில் * காணப்படுகின்றன. "ஊடல் கூடல் உணர்தல் புணர்தலி"க் தோழியார் கூறுவது நம்மை அங்காங்குத் நிறுத்திச் செய்கின்றது. அவற்றில் சிலவற்றைக் காண்க.

முற்றி லாதபிள் ளாகளோம்
முலைபோந்திலா தோமை நாடோறும்
சிற்றில் மேலிட்டுக் கொண்டு நீசிழி
துண்டி திண்ணென நாமது
கற்றி லோம் கடலை யடைத்தரக்கர்
குலங்களை முற்றவும்
செற்றி லங்கையைப் பூச லாக்கிய
சேவ காவெம்மை வாதியேல்.

2-ம் திருமொழி 6.

பேதம் நன்கறி வார்களோ டிவை
பேசினுல் பேரியதின்சுவை
யாது மொன்றறி யாத பிள்ளாக
ளோமை நீகலிக் தென்பயன்.

2-ம் திருமொழி 7.

முற்றத் தூடு புகுந்து நின்முகம்
காட்டிப் புன்முறுவல் செய்து
சிற்றி லோடெங்கள் சிந்தையுஞ் சிதைக்கக்
கடவையோ கோவிந்தா.

2-ம் திருமொழி 9.

* பொருளிலக்கணத்தில் உரையிற் கொள்ளத்தக்க துறைகளும் இவ்வம்மையார் பதிகங்களிற்காணலாம்.

பெய்யு மாமுகில்போல் வண்ணு வுன்றன்
பேச்சும் செய்கையு மெங்களை
மையலேற்றி மயக்க வுன்முக மாய
மந்திரந் தான்கொலோ

2-ம் திருமொழி 4.

மற்றும் (இவர் பாடிய குயிற் பத்தில்)

பொங்கிய பாற்கடல் பள்ளிகோள் வானைப்
புணர்வதோ ராசையி னுலேன்
கோங்கை கிளர்ந்து குமைத்துக் குதுகலித்
தாவியை யாகுலஞ் செய்யும்
அங்குயி லேயுனக் கென்ன மறைந்துற
வாழியுஞ் சங்குமொண் தண்டும்
தங்கிய கையவனை வரக்கூவில்நீ
சாலத் தருமம் பெறுதி.

5-ம் திருமொழி 7.

இவ்வாறு சிற்றின்ப உருவத்தில் பேரின்பத்தைச் சுட்டிய இவர் பதிகங்கள் அகப்பொருட் சுவையிலாழ்ந்தும், இடக்கரடக்கியே பாடப்பட்டன. அடியில் வரும் பதிகத்தில் "விதியின்மையா லது மாட்டோம்" என்னும் சொற்றொடர் நயத்தைக் காண்க:—

இதுவென்பு குந்தித்ங் கந்தோ
இப்பொய்கைக் தெவ்வாறு வந்தாய்
மதுவின் தழாய்முடி மாலே
மாயனே பெங்க ளமுதே
விதியின்மை யாலது மாட்டோம்
வித்தகப் பிள்ளாய் விரையேல்
குதிகொண் டாவில் நடித்தாய்
குருந்திடைக் கூறை பணியாய்.

3-ம் திருமொழி 2.

மேற்கண்டஅகப்பொருட்டுறையின் ஏற்றத்தைவிளக்கும் செய்யுட்கள், ஏட்டுச் சுரைக்காய்போல், கல்வியால்வந்த அறிவுகாட்டாமல், உலகத்தில் உழைத்து உணர்ந்த அநுபவத்தை விளக்குவதால், இப்பதிகங்கள் பாடும்போது ஆண்டாள் வயது முதிர்ந்தவராயிருக்கவேண்டுமென்றி, இளமைப் பருவத்தினராயிருந்தாரென்பது நமது அநுபவத்திற்கும் யுக்திக்கும் பொருந்தவில்லை. இதன்றியும் சிறு பிள்ளைகளைத் தமது தோழிமாரென்றும் ஒத்த வயதினரென்றும் கூறும்சொற்றொடர்ப் பிரயோகங்களின்றி இளையவர்களென்றும் இளமைக்குணமுடையவரென்றும்,சிறுமியரென்றும், சிறுவரென்றும்,கூறும் செய்புட்களை நோக்குமிடத்துத்தான் வயதிலுங்கூடப் பெரியாரென்றே நாம் ஆண்டாளை எண்ணவேண்டியதாயிருக்கின்றது. இச்சம்பவம் திருப்பாவையிலும் நாய்ச்சியார் திருமொழியிலும் பற்பல விடங்களிற் காணலாம். "சீர் மல்கு மாப்பாடிச் செல்வச் சிறுமியர்கள்" என்றும் திருப்பாவை முதற்செய்யுளிலும், "எல்லே இளங்கிளியேயின்னம் உறங்குதியோ, சில்லென்றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன்" என, 15-ம் செய்யுளிலும் "தாயைக் குடல் விளக்கம் செய்ததாமோதரன்" என 5-வது செய்யுளிலும், "பிள்ளாய் எழுந்திராய்" என6-ம் செய்யுளிலும்,"பிள்ளைகளெல்லோரும்பாவைக்களம் புக்கார்" என்று 13-ம் செய்யுளிலும் சிறுவரைக்குறித்துக் கூறுவது வயதுமுதிர்ந்தோர் சுவாபமன்றே? மற்றும் காமதேவனைப் பழித்துப் பாடும் பதிகத்தில்

உருவுடை யாரீனை யார்கள் நல்லார்
ஒத்துவல் லார்களைக் கொண்டு வைகல்
தெருவுடை யெதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா.

1-ம் திருமொழி 6.

என்றவிடத்தும் மற்றும் அப்பதிகத்தில் தன்னை வர்ணிக்குமிடத்தும், இவ்வம்மை இளம்பருவத்தினரன்றே வெளியாகும்.

ஆகையால் ஆண்டாள் இளமைப்பருவத்திலேயே முத்திபெறுது பலநாள் உலகைக்காத்துப்பற்பலஅரிய பெரிய காரியங்களைச்செய்து ஒளவையார்போல்கன்னிகையாய் உலகின்கண் மறத்தை மாற்றி அறத்தை நிலை நிறுத்திப் பிறகு திருவரங்கன் திருவடி யடைந்தாரென்று அவர் பதிகங்கள் காட்டாநிற்கும்.

சிதம்பரதேவர் சரிதம்.

[787-வது பக்கத் தொடர்ச்சி]

16. இரவிவர்ம ராஜன்.

அழகாபுரத்தரசன் இரவிவர்மன் தன் சபையில் முதன்மந்திரி மிருதுசீலன் என்பவனை நோக்கி, "நீ நேற்றக்கூறியது சரி. இன்று காலை, பாலவனஞ் சென்றிருந்த தூதுவன் குலசேகரன் புத்திரசோகத்தால் மெலிந்து துக்கமிகுதியினால் பலங்குன்றி வருந்துகின்றனும். பிரஜைகளும் சோகித்திருக்கிறார்களாம். விக்ரமசேனனே எல்லாக்காரியாதிகளையும்நடத்திவருகிறனும். பராக்ரமசேகரருக்குப் பிறகு தகுந்த சேனைபதியில்லாமையால் சைன்யங்கள் திருப்தியின்றி இராஜவிசாரணைகுன்றி நமது சோமபாலராஜனை எதிர்பார்த்திருக்கின்றார்களாம். ஆகையால் இனித் தடையின்றிச் சேனையை நடத்தி யுத்தத்திற்குச் செல்வோம்" என்றான்.

மிருதுசீலன்:—பிரபுவே! பாலவனம் நான்குகாத தூரமேயுளது. ஓர் இரவில் முற்றுகைபோட்டுச் சண்டை செய்யலாம். ஆகிலும் நீரவிசாரியாது ஒரு விஷயத்தில் தலையிட்டுக்கொள்ளலாகாது. குலசேகரப் பெருமாள் சக்ரவர்த்தி. நாம் அவருக்குச் சிற்றரசர். அவருக்குத் துணை அனேக அரசர்களிருக்கிறார்கள். அவர் மருமக்களாகிய மாளவதேச வேந்தன்புதல்வர்கள் மிகப் பலசாலிகள். அதிக சைன்னிய முடையவர்கள். அவர்கள் துணைபுரியவரின் நாம் காற்றுப்பற க்கவேண்டும். பாலவன சைன்னியம் நமக்கு வசப்படினும் முற்றும் துணையாயிருக்குமா? நமக்கிருப்பதோ சிறுசைன்னியம்; சொற்ப நாட்டையுள்ளோம். தவிர குலசேகரப்பெருமாள் நமக்குத் தீங்கு நினையாதவர்; ஆகையால் நமக்குத் துணைசெய்ய யாரும் வரமாட்டார்கள். நாம் சோமபாலன் வார்த்தைக்கிணங்கி அவசரப்பட்டுவிட்டாற் பிறகிது எப்படியாமோ வென்று யோசிக்கிறேன்.

சோமபாலன்:—கினக்தெழுந்து ரோஷத்துடன் 'ஓ மிருதுசீலரே! உமது மந்திராலோசனை மிக மெச்சத்தக்கதே. இப்போர்ப்பட்ட பிரபுக்களை முதன் மந்திரியாய் நியமிக்கத்தகுமா? அந்த இராஜாங்கத்தின் மர்மங்களெல்லாம்.தெரிந்தவன் யான் என்பதைச் சற்றுங் கவனித்தீரில்லை. சிறியது பெரியதாவதுதா னெப்படி? முயற்சியைக் கெடுத்து விடுவதாற்றானே? உமது குலசேகரன்றான் எப்படிச் சக்ரவர்த்தியானான்? யுத்தம் புரியாமல் ஜயமடைந்தானே? க்ஷத்திரியர்கள் தர்ம மென்ன ? சமயம்வாய்க்கில் பின்னிடைந்து புறங்கொடுப்பதோ யுக்தி?யுத்தமுகத்திற் புறங்காட்டியோடும் பயங்கொள்ளியைப்போல் எனது அரசனுக்குத் தற்போதனைகளைச் செய்து மனதைக் குன்றச்செய்யாதே. யுத்தபயமிருக்கின் வரவேண்டாம். முயற்சிகள் யாவும் செய்து பிரயாணப்படும்போது முடக்குச் சொல்வது அவலட்சணம். என் தந்தையின் சொற்கடங்கியிருந்த சைன்யம் யாவும் என்னை மறக்கார்கள். நாம் போவதொன்றே பிரயாசை. இரண்டுமாத வழிக்கப்பாலிருக்கும் மாளவ தேசத்தரசன் வருமூன் ஜாக்ரதைபண்ண நமக்கென்ன தெரியாதா ? குலசேகரன் சைன்யத்துடன் நமது சேனையுஞ் சேரில் மாளவசைன்யம் சேனபதியான எனக்கு ஒருதிரண மாத்திரம். குலசேகரன் மருமக்களை மிகச் சிலாகித்துப் பேசினுய். அவர்கள் அற்ப சேவகர்களிடம் பட்டபாடு எனக்கல்லவோ தெரியும். அவர்கள் பரிசித்த பெண்களை வேறு யாரும் கைக்கொள்ளாரென்றே அவர்களுக்குக் கொடுக்கலாயிற்று. (அரசனைப் பார்த்து) "ஓ பிரபுவே! தேவரீர் அஞ்சவேண்டாம். இப் போர்முகத்திற் கஞ்சுகின்றவர்களது வார்த்தைகளுக்கிடங்கொடாமற் சேனையைத் தடையின்றி நடத்துவதே உத்தமம்.

குடாரவிந்தன்:—அரசே, பத்து வருடங்களாகச் சேனைபதியா யமர்ந்த என் வீரத்தைக் காண்பிக்க இதுவரையில் சந்தர்ப்ப மொன்றும் நேரிடவில்லை. சோமபாலசேகரர் உறைத்தவை யாவும் உண்மையே. இம்முயற்சியைக் கைவிடாது நடத்தினுல் கூடுமானபொழுதில் ஜயமடையலாம். என் தீரத்தையும் சற்றுக் காணலாம்.

இரவிவர்மன்:— சபையோர்களே! யாவு முணர்ந்த உங்கள் நோக்கம் யாது? நமதிராஜ்ஜியத்தை விருத்தி செய்யவேண்டுமென்று நாம் சிலகாலமாய் நினைத்திருந்தோம்.சோமபாலர் நமக்குவேண்டிய உதவிகளளித்தக்குலசேகரன் மர்மங்களைத் தெரிவித்துப் பாலவனத்தையாள இச்சை யுண்டுபண்ணியிருக்கிறார். நீங்களு மாமோதிக்கின்சைன்யத்தைநடத்தலாம். உங்கள்எண்ணங்களையும் வெளியிடுங்கள்" என்றனன். சபையிலிருந்தபடைத்தலைவர் முதலியோர், இனி என்ன போதிக்கினும் அரசன் மறப்பான்; சோமபாலன் வலையில் சிக்கியிருக்கிறான். யுத்தத்தில் ஜயமே கிடைக்கும். பிறகு எப்படி முடிந்தாலும் நமக்கென்ன. யுத்தம் நடக்கில் நமக்கு லாபமுண்டாம்; என்றிவ்விதம் தீர்மனித்து ஒரே பிடிவாதமாய் யுத்தம் செய்வதே யுக்தமென்றனர். அரசனும் சோமபாலனும் மகிழ்ந்து மறுநாளிரவு சைன்யத்தை நடத்த உத்திரவளித்து எழுந்திருக்க ஒரு சேவகன் பரபரப்பாய் ஓடிவந்து "ஒருமாதகாலமாய்க் கள்வரைத் தேடிச் சென்ற வீரர்கள் படிவாயிலில் உத்திரவுக் கெதிர்பார்த்து நிற்கிறார்கள்" என்

ரூன். அரசன் அனுமதி கொடுக்கவும், சேணைத்தலைவன் இருபது மனிதரை விலங்குடன் இராஜ ஸன்னிதியில் நிறுத்திப் "பிரபுவே, இவர்களில் விழுந்து விழுந்துச் சுற்றிப்பார்ப்பவன் இவர்கட்குத் தலைவன். மற்றவர்கள் அவன் சொல்லைத் தலைபால் வஹித்து நடப்பவர்கள். அநேகவிடங்களில் கொலையுங்களவுஞ்செய்துகொண்டு பிடி கொடாமற் றப்பித்துத் திரிந்து காட்டிலேயே வசிப்பவர்கள். திருடவேடங்கொண்டு கள்வரைத் தேடுகையில் பாலிவனத்தருகில் ஓர் பெரிய வனத்தில் திருடின பொருளைப் பங்கிட்டுகொண்டிருக்கும்போது இவர்களை வளைத்துப் பிடித்தோம்" என்ன, அரசன் அக்கள்வரின் தலைவனை, "நீயார், உன் பெயரென்ன?" எனவே அவன் கர்வத்துடன் "என் விர்த்தாந்தம் யாவும் தங்களருகில் வீற்றிருக்கும் சோமபால சேகர மகாராஜனைக் கேட்டாற் தெரியும்" என்றான். சோமபாலன் திடுக்கிட்டுக் குறிப்பாய்ப் பார்த்துத் தன் தம்பியென்றுணர்ந்து புன்னகையுடன், "ஓ நரசேகர! இவர்களை என்னிடம் ஒப்புவிப்பீர்களாகில் இவர்கள் ரகசியங்களைத் தெரிந்து வெளிப்படுத்துகிறேன். இவர்கள் நம் முயற்சிக்கு உதவிபுரியக் கூடியவர்கள்" என்றான். அரசனதற்கிணங்கச் சபை கலைந்தது.

சோமளாங்கனை யவன்தனை நருடன்தனதிருப்பிட மழைத்துச் சென்று நன்கு உபசரித்து ஆனந்தங் கொண்டு ஒருவரையொருவர் தழுவிச் சகோதர வாத்ஸல்யத்தைக்காண்பித்து "ஓ தம்பி நீ, சிறைபடைக்கப்பட்ட நாள்முதல் நமது மாதா வியாகூலத்தால் ஒரு தினம் ஒரு வருஷமாகத் தள்ளி நீ சிறைபினின்மறுத்தப்பித்துக் கொண்டது தெரிந்து ஆனந்தித்து உன் வரவை எதிர்பார்த்திருந்தார். நீ வராமையால் மனம நொந்து பிராணனைவிட்டார். தாயுமிறந்தனர். தந்தையுத்திரவின்படி நானிங்கு வந்து அவர் நண்பரின் புதல்வனை இவ்வரசனை வசப்படுத்திப் பாலிவனத்தை முற்றுகையிட எல்லா முயற்சியும் நடைபெற்று வருகையில் நீயும் வந்து சேர்ந்தாய். விஜயன் எனைப் பிரிந்து விக்ரமசேனனிடம் சென்றான். நமதெண்ணம் முடிவு பெறுவதற்குத் தகுந்த சமயம் இப்போதுதான் வாய்த்தது" என்றான்.

சோமளாங்கன் :—நிகக் களிப்புற்றவனுப் "அன்பான அண்ணனே, பிதாவின் உத்திரவுபாது?

சோமபாலன் :—"உன் தம்பி விடாமுயற்சியுடன் பாலிவனத்தைக் கைக்கொள்ளவேலைசெய்துவருவான். உன்னை எப்படியும் ஒருநாள் சந்திப்பான். நீ நாற்பது நாழிகை யகலவிருக்கும் அழகாபுரஞ் சென்று இரவிவர்மராஜனை யடைந்து அவனை வசப்படுத்திக் குலசேகரன் மர்மங்களையும் அவன் நமக்குச் செய்துவரும் கொடுமைகளையும் கூறி அவனைத் துணைகொண்டு பாலிவனத்தை யபகரித்துக் குலசேகரனையும் விக்ரமசேனனையும் உன்னையடைத்திருந்த காராக்ருகத்தில் அடைக்கச்செய்வாய்" என்று கூறிப் பிராணனை விட்டார்.

சோமளாங்கன் :—பிதாவை நினைத்துப் பரிதபித்து விஜயனை வெறுத்து, "அண்ணா நாங்கள் இங்குற்று இவ்வளவு முயற்சியும் செய்திருப்பது மிக நன்று. என் வரலாற்றை அரசனுக் குரைத்துத் தளத்தில் ஓர் தலைவனை அமைக்கச் செய்வீராகில் நான் என்னுடனிருக்கும் சுத்த வீரர்களுடன் யுத்தத்திற்குப் பிரயாணப்படுகின்றேன் இவர்கள் யாவரும் பாலிவன சைன்யத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள்மேல் சந்தேகித்து விக்ரமசேனன் இவர்களை நீக்கிவிட்டான். சைன்யத்தில் நம்பிக்கையில்லாது பயந்திருக்கிறான். யாவும் மிக அனுகூலமாகவே நேர்ந்திருக்கின்றன."

சோமபாலன் :—அப்படியே செய்கிறேன். சந்தேகம் வேண்டாம். நீ சிறையினின்று விடுபட்டபின் எப்படி இச்சேவகர்கட்குப் பிடிகொடுத்தாய்? எவ் வளவு கஷ்டங்கள் அனுபவித்தனையோ?

சோமளா :—சிறையினின்று விக்ரமகேதுவுடன் விடுபட்டு வனத்திற் சென்றோம். அங்கு என்னை விட்டு அவன் போயினன். வனத்தில் சஞ்சரிக்கும் போது சில கள்வர் என்னை நிர்பந்தப்படுத்தி அழைத்துச் சென்றனர். அவர்களுடன் கள்ளத்தனம்செய்து நாட்கழிக்கப் பிரியமில்லாமல் தப்பித்துக்கொண்டு பாலிவனஞ் சேர்ந்தேன். அங்கு யாரும் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை. நமதரண்மனை மூடப்பட்டிருந்தது. விசாரணையில், பிதாவும் அண்ணையும் இறந்தார்களென்றும் தாங்கள் அவ்விடம் விட்டுப் போய் விட்டதாகவும் உணர்ந்து சேணைத்தலைவரில் நமது நண்பரிற் சிலரைக் கண்டு என்னைத் தெரிவித்த அவர்களை வசப்படுத்தி வேண்டும்போது சேணையைத் திருப்பி அரசனை யெதிர்க்க முயற்சிசெய்துவரும் போது விக்ரமசேனன் சந்தேகித்துச் சேணைத்தலைவரிற் சிலரை நீக்கினான். பிறகு அங்கிருப்பது தகாதென்று அவர்களை யழைத்துக்கொண்டு காடுகளில் வசம் செய்து பட்டணத்துப் பெரிய குடிகளைக் கவர்ந்தும் கொள்ளை இட்டும் திரவியம் சேர்த்து வந்தோம். அப்படி இருக்கப் பத்து நாட்களுக்குமுன் இவ்வூர் அரசன் சேவகர்கள் நாங்கள் நித்திரை செய்கையில் காவலிருந்தவனை ஏமாற்றி எங்களைப் பிடித்துக்கொண்டார்கள். அரசனிடம் பெருமைக்காக ஏதேதோ பிதற்றினர்கள். இனிக் காலதாமதம் செய்யாமல் என்னையும் இச்சேவகத் தலைவர்களையும் அரசனிடம் அழைத்துச் சென்று எங்கள் வரலாற்றைச் சொல்லிச் சேணையில் அமரச்செய்யவேண்டும்."

சோமபாலன் திடங்கொண்டு அவர்களை அரசனிடம் அழைத்துப்போய் நடந்த வரலாற்றைக் கூறி சோமளாங்கனுக்கும் அவன் தோழர்களுக்கும் சைன்யத்தில் உத்தியோகங்கள் கொடுத்தமர்த்தச் செய்து இன்பவார்த்தையாடி அரசனை மகிழ்வித்தான்.

மறுநாளிரவில் சேனைகள்பட்டணத்தைவிட்டுவெளிப்பட்டு அதி துரிதமாய்ச் சென்று பொழுதுவிடிவதற்குள் பாலிவனத் தருகிருக்கும் ஓர் பெரிய வனத்தில் களைதீர்க்கத் தளமிறங்கினர். சோமபால சோமளாங்கர் சேனையை அணிவகுத்து நாலு வாயில்களுக்கும் நான்கு சேனைத்தலைவரை நியமித்துப் பட்டணத்தை முற்றுகைபோடச் சைன்யங்களுக்குத் தெரிவித்து அன்றிரவு பதினைந்து நாழிகைக்குப் பட்டணஞ் சேர்ந்து பட்டண வாசிகள் உள்ளும் வெளியும் போகாமல் பட்டணத்தைச் சுற்றி ஆரவாரித்தார்கள். சோமளாங்கன் மாறுவேட மணிந்து பாலிவனச் சேனைத்தலைவர்களைச் சந்தித்தும் தன் தமயனுடனும் அழகாபுரி அரசனுடனும் யுத்தத்திற்கு வந்திருப்பதைக்கூறி அவர்களுக்கு வேண்டுமட்டும் ஆசைவார்த்தைகளைக்காட்டிப் பிரதிக்ஞைகள் வாங்கிக்கொண்டு திரும்பிச் சென்று இரவிவர்மனுக்குத் தெரிவித்தான். அவனும் மகிழ்ந்து சோமளாங்கனைப் புகழ்ந்து சந்தோஷத்துடன் சூர்யோதயத்தில் குலசேகரப் பெருமாளுக்குத் தூதனுப்ப ஆயத்தமாய் இருந்தனன்.

கந்தபுராணமும் சங்கநூல்களும்.

[766-வது பக்கத் தொடர்ச்சி]

செந்தமிழ்க் கலைவல்லுகரும், 'கலாநிலய'ப் பத்திராதிரியருமாகிய திரு. குமரஐபா அவர்கள், புறப்பொருள் இலக்கண விடயமாக ஏதேனும் கட்டுரையை யெழுதியனுப்பும்படி கேட்டிருந்தனர். கந்தஞ் செந்தமிழ்மொழிக்குச் சொந்தநாதன் கந்தநாதனு யிருந்தும், அப்பெருமான் விடயமான 'கந்தபுராண ஆராய்ச்சியை' நமது தமிழகத்தே செவ்விதின்புரிந்து பத்திரிகைகள் வாயிலாக வெளியிட்டவர்கள் இதுகாறும் பெரிது மருகியிருத்தலின், அக்குறையைக் களைவான் வேண்டி யிதுகாலே அப்புராண ஆராய்ச்சியை யெழுத விரும்பி, முதற்கண் 'கந்தபுராணமும் சங்கநூல்களும்' என்ற இக்கட்டுரைகளை வரைய முற்பட்டோம். இவ்விடயத்தை எமது வேண்டுகோட்கிணங்கி அன்புடனே தமது பத்திரிகையில் வெளியிட அனுமதி தந்து அவ்வாறே பிரகடனஞ் செய்துவரும் நமது பத்திராதிபரவர்கட்குத் திரிகரணங்களானும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். இனி, அப் பெரியார் விரும்பிய புறப்பொருள் விடயங்கள் கந்தபுராணத்து ஆங்காங்கு வருபவற்றைச் சங்கநூற் றொடர்புகளுடன் பொருந்த வமைத்துக்காட்டி யெழுதுவான் புக்கோம்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகம் புறம் என்றபெரும் பிரிவுகள் இரண்டுள. ஒத்த அன்பால் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக்கூறப்படாததாய், யாண்டும் உள்ளத்துணர்வே துகர்ந்து இன்ப முறுவதோர் பொருளாகலின் அது அகம்எனப்பட்டது. எனவே அகத்தின்கண்ணே நிகழ்கின்ற இன்பத்தை அகமென்றது ஓர் ஆகுபெயராம். இதனை யொழிந்தன, ஒத்த அன்புடையார்தாமேயன்றி, மற்றெல்லார்க்குந் துய்த்துணரப்படுதலானும் இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் அவை புறமெனப்படும். அவை பெரும் பான்மை அறமும் பொருளுமாம். இப் புறப்பொருள் பற்றிய செய்யுள்வழக்குக்களும், அகம்போலத் தமிழ் கூறு நல்லுலகத்து வழக்குக்களினின்று வந்தனவே யென்க. அவ்வாறு செய்யுள் வழக்கம் பெறுங்கால், அவை வரம்புகடவாவண்ணம் அவற்றையும்முன்னோர் இலக்கணத்தால்செவ்விதின் வரையறைப்படுப்பாராயினர். அங்ஙனம் வகுத்த இலக்கணநூல்களில் ஒன்றான தொல்காப்பியத்துள், இப் புறப்பொருள்கட்கும் திணை துறைகளை ஆசிரியர் வகுத்தோதுகின்றார். குறிஞ்சி முதலாகிய ஐந்திணைகளையும் கைக்கிளை பெருந்திணைகளுடன் சேர்த்து ஏழுதிணையாக்கி அகப் பொருள் விளக்கப்பட்டாற்போலப் புறப்பொருளும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என ஏழுதிணையாக வகுத்து விளக்கப்படுகின்றது. இத்திணைகளெல்லாம் பண்டைக்காலத்தே தமிழ்நாட்டில் வழங்கிய போர்முறைகளையும், அம் முறையிற் காட்டப்படும் வீரச்செயல்களையும் பெரும் பான்மையாகவும், ஏனை அரசியல், கொடை, புகழ், நிலையாமை முதலியவற்றைச் சிறுபான்மையாகவும் உணர்த்துவன. இத்திணைகளுள் வெட்சியாவது போர் குறித்தவேந்தர் இருவருள் ஒருவன் போரின்தொடக்கமாகப் பகைவனுடையபசுக்களைச்சென்றுகவர்தலும் அவன் கவர்ந்தவற்றை உரிய அரசன் மீட்பதுமாகும். வஞ்சித்திணையாது, பகைவனுடைய நாட்டைக்கைப் பற்ற எண்ணி அவன்மேற் போர்க்குச்செல்லுதலும், அவனை நாட்டுக்குரிய வேந்தன் எதிர்த்தலுமாகும். உழிஞைத்திணையாவது, வந்த வேந்தன் பகைவனுடைய மதிலை வளைத்துக் கொள்ளுதலும், அதனை யுள்ளிருந்த வேந்தன் கைக்கொண்டு காத்தலுமாம். தும்பை - வந்த வேந்தனை யிருந்த வேந்தன் எதிர்த்து அவன் வலியை யழித்தல். வாகை-பகைவரை வெல்லுதலும் அவரவர் தத்தந்தொழில்களில் மேம்படுதலுமாம். காஞ்சி-வீடுபெறுதியித்தமாகப்பலவகைநிலையாமையைச்சான்றோர் கூறுவது. பாடாண்-ஒருவனுடைய கீர்த்தி வலிமை கொடைமுதலியவற்றை யாராய்ந்து சொல்லுதல். புறப்பொருள்விடயங்கள் சிலவேறுபாடுகளுடன் புறப்பொருள் வெண்பாமாலையிற் கூறப்பட்டுள.

வஞ்சித்திணை.

வஞ்சித்திணையாவது இருபெரு வேந்தர்கள் மண்ணிடத்துள்ள வேட்கையாலே, காட்டில் வாழ்வார் அஞ்சும்படி சென்று, ஒரு வேந்தன் மற்றொரு வேந்தனைக் கொற்றங்கோடல் குறித்தது ஆகும். ஒருவன் மண்ணைவிரும்பி மேற்செல்லின் இருந்தவனும் அம் மண் அழியாமற் காத்தற்கு எதிர்த்து மேற்சொல்வானுகலின் அவ்விருவரும் வஞ்சிவேந்த ரெனப்படுவர். இவ் வஞ்சிவேந்தருடைய செய்திகளை விவரிக்கும் சிறப்புடைத் துறைகள் பதின்மூன்றும். அவைகளாவன:—(1) இயங்குகின்ற இருபடை யெழுச்சியின் ஆர்ப்பரவமும் (2) இருவர்படைகளும் ஆர்ப்பரித்துப் பகைப்புலத்துப் பரந்துசென்று அப்புலங்களைத் தீயாற் கொளுத்தலும் (3) ஒருவர் ஒருவரை மேற் செல்லுமிடத்துப் பிறவேந்தர் அவர்க்குத் துணையாக வர அப்போதுண்டாம் பெருமிதமும், (4) அவ்விருவரும் தந்தம் படையாளர்க்கும் பரிசிலர்க்கும் படைக்கலமும் பரிசிலும் அளித்தலும், (5) இருவரும் இரவும் பகலும் பலகாலும் முட்டிச்சென்று, அந்நாட்டைக் காலல்புரியும் வீரரைக் கொல்லுங் கொற்றமும் (6) போரில் வீரச்சிறப்பைக் காட்டிய தானைத்தலைவர் வேந்தனுற் சிறப்பெய்திப் புகழப்படும் நெடுமொழியும் (சிறப்பாவன-ஏனாதி, காவிதி முதலிய பட்டங்களும், நாடும், ஊரும், பெறுதல்), (7) பகைவேந்தரை யொரு பொருளாக மதியாது படையைச் செலுத்தும் பேராண்மையும், (8) தன்படை நிலையாற்றாது பெயர்ந்த விடத்து, விசையோடுவரும் வெள்ளத்தைக் கல்லணை தாங்கினற்போலத் தன்மேல் வரும்படையைத்தானே தடுத்து நிற்கும் பெருமையும் (9) வேந்தன் பெரும் போர்புரிந்த பிற்றைநாள் அப்போர்வீரர் செயலைப் புகழ்ந்து உற்சாகப்படுத்தற்பொருட்டுத் தானே அவருடன் உண்பான்போல வந்து அவர்க்கு வேண்டிய உண்டியை யளிக்கும் பெருஞ்சோற்று நிலையும், (10) இவ்வாறு பொருது நின்ற இருபெரு வேந்தருள் ஒருவர் ஒருவரது வலிமிகுதியைக் கண்டஞ்சித் திறை கொடுத்தற் குடம்பட அதனை வாங்கினர்க் குளதாகிய விளக்கமும், (11) அங்ஙனந் திறைகொடுத்தோனது

குறைபாடும், (12) வென்ற வேந்தன் பகைகாடழித் தமைக்கு இரங்கித் தோற்றோனைச் சிறப்பிக்குங்கொற் றவள்ளேயும் (வள்ளே - உரற்பாட்டு), (13) அங்ஙனம் வென்றுந் தோற்றும் மீண்டவேந்தர், தம் படைவீர ரில் கணே வேல் முதலிய பாய்ந்து துன்புற்ற வாட் டம் தாமே சென்று உசாவியும் பொருள்கொடுத்தும் தழுவி யுபசரித்தலாகிய தழிஞ்சியும் பிறவுமாம்.

இவை யாவும்,

இயங்கு படையரவம் எரிபரந் தெடுத்தல்,
வயங்க லெய்திய பெருமை யானும்,
கொடுத்த லெய்திய கொடைமை யானும்,
அடுத்தூர்ந் தட்ட கொற்றத் தானும்,
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்,
பொருளின் றுய்த்த பேராண் பக்கமும்,
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் ருங்கிய பெருமை யானும்,
பிண்ட மேய பெருஞ்சோற்று நிலையும்
வென்ரூர் விளக்கமும், தோற்றோர் தேய்வும்,
குன்றுச் சிறப்பிற் கொற்ற வள்ளேயும், [இக்
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு, தொகை
கழிபெருஞ் சிறப்பிற் றுரைபதின் மூன்றே.

(தொல்-புறத்திணையியல். சூத்திரம், 63)

என்ற சூத்திரத்தால் இனிது விளங்குதல் காண்க.

இச்சூத்திரத்திற் குறிக்கப்பட்ட 'எரிபரந்தெடுத் தல்' என்னுந் துறைக்கு உதாரணமாக அடியில் வரும் கந்தபுராணச் செய்யுட்களைக் காணலாம்.

சூரபன்மனது கடலிடையுள்ள மகேந்திரமென்ற நகரத்தை யெறிகொளுவுவேனெனக் கடுஞ்சூளுரைத் தத் தன் தலேவனுகிய சத்திவேல் முருகனது ஏவலேப் பெற்றுப் படைகளுடன் அந்நகர்க்குப் போந்து பொன்னெடுஞ் சிலேதனிற் பகழிகளிரண்டைத் தொடு த்தான் வீரவாகுதேவன், என்ற சந்தர்ப்பத்தில் நமது கவியரசர் கீழ்வரும் செய்யுட்களைக் குறிக்கின்ரூர்.

அன்னதோ ரமைதியி னுடன் மொய்ம்பினுன்
வன்னியின் படையொடு மருத்தின் மாப்படை
பொன்னெடுஞ் சிலேதனிற் பூட்டி ஈவிர்போ
யிந்ந ரழித்திரென் றிமைப்பி லேவினுன்.

ஏவிய அப்படை யிரண்டு மொன்றியே
மூவுல கிறுதியின் முடிக்குந் தம்முரு
மேவின நகரெலாம் விரவிச் சூழ்ந்தன
தீவிழி யவுணரும் இரிந்து சிந்தவே.

ஒட்டலர் நமையினி யுருத்துச் செய்வதென்
விட்டன னிங்குளன் வெருவ லேமெனு
நெட்டழல் கொளுவியே நிலவி மாநகர்
சுட்டன வடுநிரை பொரியிற் றுள்ளவே.

(கந்தபுராணம் - யுத்தகாண்டம், நகர்புகு படலம். செய்யுள் 37, 38, 39,)

[அப்படிப்பட்ட சமயத்தில் வீரவாகுதேவர் கனல் வாளியுடன் வலியம்பையும் எடுத்துப்பொன்மயமான கெடிய வில்லிற் பூட்டி, 'நீங்கள் சென்று, இந்தச் (சூரனது மகேந்திர) நகரத்தை அழியுங்க' ளென்று விரைவாகவிட்டனர்; விடப்பட்ட அப்பகழிகள் இரண் டும் ஒன்ருகக் கலந்து மூன்றுலகங்களேயும் பிரளய காலத்தி லழிக்கின்ற தங்களுண்மையுருவங்களுடன், தீவிழிகளேயுடைய அசுரர்களும் அஞ்சும்படி அவ்வூர் முழுவதிலும் பரவிச்சுற்றின; பகைவர்கள் நம்மீது கோபித்து நம்மை இங்கென்ன செய்யப் போகிறர் கள், விட்டவன் இங்கேயே யிருக்கின்ருன்; அதனல் நாமஞ்சோமென்று பேருருவோடு விளங்கி, அப்பெரிய நகரத்தில் கெடிய அழலேப் பற்றவைத்து நட்சத்திரவரிசைகள் பொரியைப்போல் துடிக்கும் படி சுட்டன - என்பது பொழிப்புரை]

இனி, இத்துறைக்கு உதாரணமாக நச்சினர்க்கினி யர் குறித்த புறநானூற்றுச் செய்யுள்களேப் பழைய உரையுடன் ஈண்டுக் குறிப்பிடுவாம்.

வீணமாட்சிய விரைபுரவியொடு
மழைபுருவின தோல்பரப்பி
மூணமுருங்கத் தலேச்சென்றவர்
வீலேவயல் கவர்பூட்டி
மணமரம் விறகாகக்
கடிதறைநீர்க் களிறுபமுஇ
யெல்லுப்பட விட்ட சுடுதீ விளக்கஞ்
செல்சுடர் ஞாயிற்றுச் செக்கரிற் றேன்றப்
புலங்கெட லிறக்கும் வரம்பி றூனே

திணை - வஞ்சி, துறை - மழபுலவஞ்சி. சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப் பாண்டரங் கண்ணனர் பாடியது.

மழபுலவஞ்சியாவது 'அரசனெருவன் பகைவர் நாட்டை எரியூட்டிக் கொள்ளேகொண்டு அழித்த தனேச் சிறப்பித்துக்கூறுதல். 'ஏம நன்ஞடொள்ளெரி யூட்டி' யென்றதனல் இது மழபுலவஞ்சியாயிற்று - என்றனர் புறப்பாட்டுரையாசிரியர்.

[போரிற்கு நன்மையுடையவாகிய விரைக்த குதிரை யுடனே முகில்போலும் நிறத்தையுடைய பரிசையைப் பரப்பி மூணியிடங் கலங்க மேற்சென்ற, அவரது செல்வீலே கழனியைக் கொள்ளேயூட்டி, மணியிடத்து மரமே விறகாகக் காவற் பொய்கைகளின் நீரிலே களிற் றைப்படிவித்து விளக்கமுண்டாக விடப்பட்ட நாடு சுடு நெருப்பினது ஒளிதான், விடுகின்ற கதிரை யுடைய ஞாயிற்றினது செக்கர் நிறம்போலத் தோன்ற இடமில்லேயாகச் சென்றுவிடும் எல்லேயில்லாத படை- என்பது, புறப்பாட்டுப் பழைய உரை]

களிறு கடைஇயதாட்
கழலுரீஇய திருந்தடிக்
கணேபொருது கவிவண்கையாற்
கண்ணெளிர் வரூஉங் கவின்சா பத்து
மாமறுத்த மலர்மார்பிற்
ரேல்பெயரிய வெறுழ்முன்பி
னெல்லேயு மிரவு மெண்ணுய் பகைவ
ரூர்சுடு விளக்கத் தழுவிளிக் கம்பலேக்
கொள்ளே மேவலே யாகலி னல்ல
வில்லவா குபவா லியறேர் வளவ
தண்புனல் பரந்த பூசன்மண் மறுத்து
மீனிற் செறுக்கும் யாணர்ப்
பயன்றிகழ் வைப்பிற்பிற ரகன்றலே நாடே.

திணை - வஞ்சி, துறை - கொற்றவள்ளே, மழபுல வஞ்சியுமாம்.

சோழன் கரிகாற்பெருவளத்தானேக் கருங்குழ லாதனர் பாடியது.

கொற்றவள்ளேயாவது - அரசனுடைய கீர்த்தியைச் சொல்லி அவன் பகைவர் தேசம் கெடுதற்கு வருந்து தல். 'மன்னவன் புகழ்கிளைந் - தொன்னர்நா டழி பிரங்கின்று' (புறப்பொருள் வெண்பாமாலே, வஞ்சிப் படலம் 8.)

[களிற்றைச் செலுத்திய தாளேயும், வீரக்கழலுரிஞ் சியதிலக்கணைத்தாற்றிருந்திய அடியிணேயும் அப்பொடு பொருது இடங்கவிந்த வள்ளிய கையுடனே கண் ணிற்கு விளங்கும் அழகிணேயுடைய வில்லேயும் திரு மகள் பிறர்மார்பை மறுத்தற் சேதுவாகிய பரந்த மார் பிணேயும், யாணேயைப் பெயர்த்த மிக்க வலியிணேயு முடைய, பகலுமிரவு மெண்ணுது பகைவரது ஊரைச் சுடுகின்ற நீயினது ஒளியின் கண்ணே தஞ் சுற்றத் தை யழைத்தலுடனே அழுகின்ற கூவுதலேயுடைய ஆரவாரத்தோடு கூடிய கொள்ளேயை விரும்புதலுடை யை; ஆதலான் இயற்றப்பட்டதேரையுடைய வளவ! குளிர்ந்த நீர் பரந்த ஓசையை யுடைய உடைப்புக்களே மண்மறத்தலான், மீனுலடைக்கும் புதுவருவாயினே யுடைய பயன் விளங்கும் ஊர்களேயுடைய மாற்ரூரது அகன்ற இடத்தையுடைய நாடுகள் நல்ல பொருள்கள் இல்லே யாகுவனவால்—என்பது பழைய உரை]

இது பிற ரகன்றலேநாடு, இல்ல வாகுப என்றமை யின் கொற்றவள்ளேயும், 'ஊர்சுடு விளக்கத் தழு விளிக் கம்பலே' யென்றமையின் மழபுலவஞ்சியும் ஆயிற்று என்பர் உரையாசிரியர்.

முற்குறித்த புறப்பாட்டின் இரண்டு செய்யுட்களே யும் உதாரணமாகக் காட்டி, 'இவை கொற்றவள்ளேப் பொருண்மையவேனும், உட்டகுதி பலவுந் துறையாய் வருதலின், எரி பரந்தெடுத்தற்கும் உதாரணமாயின என்றனர் நச்சினர்க்கினியர்.

'எரிபரந்தெடுத்தல்' என்ற தொல்காப்பியத்திற் குறிக்கப்பட்ட துறை 'உழபுல வஞ்சி' என்னும் பெய ருடன் புறப்பொருள் வெண்பாமாலேயிற் குறிக்கப் பட்டுளது. 'நேராதார் வளநாட்டைக், கூரெரிகொளீ இயன்று' (பொருந்தாதாருடைய நல்ல தேசத்தை மிக்க நெருப்பைக் கொளுத்தியது) (புறப்பொருள் வெண்பாமாலேயுரை - மகாமகோபாத்யாய - வே. சாமி நாத ஐயரவர்கள். 3-ம் பதிப்பு பக்கம் 25.) பகைவரது வேற்றுப்புலத்தைக் கொள்ளேயூட்டி அகங்கள் பாழ் படக் கொள்ளேகொண்ட செய்தி 'மழபுலவஞ்சி' யென்னும் பெயருடன் குறிக்கப்பட்டுளது. 'கூடார் மூணி கொள்ளே சாற்றி, வீடறக் கவர்ந்த வினேமொழி ந்தன்று' என்பதுகொளு. (டி நூல் பக்கம் 26.)

மற்றும் இந்நூலில் 'பெருவஞ்சி' என்று ஓர் துறை யுளது. 'தன்னுடைய முன்னேவந்து செறியாதார் கல்ல தேசத்தைப் பின்பும் கோபித்து நெருப்பைக் கொளுத்தியது' என்ற பொருளமைந்த 'முன்னடை யார் வளநாட்டைப் பின்னருமுடன் றெரிகொளீ இயன்று' என்ற கொளு அத்தலேப்பின் கீழுளது. இவ்வாறே இலக்கணவிளக்க ஆசிரியரும் 'கூடலர் நாட்டுக் கொடுநெடு வியலூர் ஊடெரி யூட்டிய உழபுல வஞ்சியும்' 'முன்னடையாதார் வளங்கெழு நாட்டைப் பின்னு மெரியூட்டிய பெருவஞ்சி யானும்' என்று குறித்துள்ளார் (இலக்கண விளக்கம் - பொருளதிகா ரம் - புறத்திணேயியல். சூத்திரம் 8.) இப் 'பெரு வஞ்சி' என்னுந்துறையைச் சிலப்பதிகாரத்தில் 25 காட்சிக் காதையில் 143-வது வரியில் 'வென்ரோர் விளங்கிய வியன்பெரு வஞ்சியும்' என இளங்கோவடி கள் எடுத்தாண்டுள்ளார். இதனல் வேந்தராயினர் ஓர்முறை பகைவரூரைச் சுடுதலோடு நீற்றந்தணியாது இரண்டாமுறையு மெரித்திடும் வழக்கம் உண்டென னத் தெரிகின்றது. இதணே 'அடுத்தூர்ந்தட்ட கொற்ற த்தானும்' என்னும் தொல்காப்பிய புறத்திணேயியலில் 'இயங்கு படை...பதின்மூன்றே' என்னுஞ்சூத்திரத்தி லுள்ள துறையில் அடக்கலாமெனத் தோன்றுகிறது. என்னே? 'எடுத்துச்சென்ற இருபெருவேந்தர் படை யாளர் வரவறியால் இரவும்பகலும் பலகாலும் தாம் ஏறி, அந்நாட்டைக் காவல்புரிந்தோரைக் கொன்ற கொற்றமும்' என்று இத்தொடர்க்கு உரைகூறிய நச் சினர்க்கினியர், உரையினிறுதியில் இனிக் கடிமரந் தடிதலும், களிறும் மாவும் துறைப்படிவனவற்றைக் கோறலும், பழஞ்சேரியைச் சுடுதலும், முதலியன வும் அடுத்தூர்ந்தட்ட கொற்றத்தின்பாற்படும். அவை சருவூரிடைச் சேரமான் யாணேயை யெறிந்தாற்போல் வன' என்று கூறியவற்றுள் 'புறஞ்சேரியைச் சுடுத லும்' எனக் குறித்தனராகலான் என்க. இராமாயணத் தில் மகாவீரனுகிய அனுமானேக் கொல்ல நினேந்து வாலிற் கிழிபல சுற்றி அரக்கர் தீக்கொளுவ, உடனே அனுமான், பிராட்டியின் பெருங்கருணேயால் கனல் தன்னேச் சுடாதிருக்கும்படி வரம்பெற்றுத் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளின் அம்சமானதால் தன் னிகரில்லாப் பெருமிதத்துடன் கடல் சூழ்ந்த இலங் கைமா நகரத்தை அவ்வெரியைக் கொண்டேகொளுத் திய வரலாறும் இந்த 'எரிபரந் தெடுத்தல்' என்னுந் துறைக்கு உதாரணமாகும். அடியில்வரும் கம்பர் பாசு ரத்தை இங்கெடுத்துக்காட்டி இத்துறையை முடிக் கின்றும்.

நீனிற நிருதர் நீண்டு செய்பொழி வேள்வி நீங்கப்
பால்வரு பசிய னென்பான் மாருதி வாலப் பற்றி
யாலமுண்டவனன் றூட்டவுலகெலாமழிவினுண் ணுங்
காலமே யென்ன மன்னே கனலியுங் கடிதினுண்டான்

[கறுத்தநிறமுள்ள அரக்கர்களால்(இராக்கதர் செய் யும் உபத்திரவங்களால் என்றபடி) இவ்வுலகத்திலே செய்யைச் சொரிந்து செய்யும் யாகங்களே (அனேவ ரும்) விட்டிட்டதனல், தன்னிடத்தே மிக்க பசியை யுடையவனென்று சொல்லப்படுபவனுன அக்கினிதேவ னும் (தனக்குத் துணேவரான) வாயுவினது குமார னுகிய அனுமானது வாலேத் தனக்கு ஆதாரமாகக் கொண்டு விஷத்தை யமுதுசெய்தவனுன சிவபிரான் நன்றுக உண்பிக்கத்தான் உலகங்களெல்லாவற்றையும் அழியும்படி உண்ணும் (எரிக்கும்) காலத்திலேபோல, விரைவில் (அவ்வரக்கர் நகர் முழுவதையும் உண்ண லானுன்(எரிக்கலானுன் என்றபடி)என்பது பொழிப் புரை.]

கலா நிலயம்.

1930-வருடத்திய இதழ்களேப்பற்றிய விவரம்
818-வது பக்கத்தில் காணலாம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்—9. பள்ளிபடைப் படலம்.

[797-வது பக்கத் தொடர்ச்சி]

தாயென அன்றியே தீபன செய்வனே

தன்னுல் நிகழ்ந்த தன்மை யனைத்தையும் தெரியச் சொல்லாமுன்னமே பரதனுல் ஏசப்பெற்றபின் கைகேசி, தான் செய்த கோளெல்லாம் குறித்துரைக்க வாயெங்குக் கண்டாளோ, விந்தையே! அவள் வாயும் மொழியும் தேடுமிடையில் பரதனே பிரிந்தகன்ற தன் தந்தையை நினைத்துருகி,

அறந்தனே வேரறுத் தருளைக் கொன்றுபர்
சிறந்தகின் றண்ணளித் திருவைத் தேசழித்
திறந்தனே யாமெனி லிறைவ நீதியை
மறந்தனே யுனக்கிதின் மாசு மேலுண்டோ.

[அறத்தை வேரோடு அறுத்து, அருளைச் சிதைத்து, மிகச் சிறந்த உன் இருபையாகிய செல்வத்தை ஒளிகெடுத்த நீ இறந்தாய் என்றுல் நீதியை மறந்தவனே ஆகின்றுய். இறைவனே இதனைக் காட்டிலும் உனக்குக் குற்றம் வேறு வேண்டுமோ.]

எனப் புலம்பத் தலைப்படுகின்றுன். தயரதமன்னனைப் போன்ற சான்ரோர் உலகினது கலங்கருதி உயிர்தரி டிருக்கவேண்டிய கடமை நெடிதுபூண்டவர். ஆதலின் இம்மைத் தன்பங்களுக்கு ஆற்றுமிலேனும் அல்லது மறுமை இன்பங்களுக்கு அவாவினேனும் உயிரினை உதறிச் செல்லுதல் அன்னவர்க்கு அறமேனும் அருளேனும் ஆகாதென்னும் நீதியை உணரவல்ல மேன்மையோன் பரதனுகையால் இங்ஙனம் கூறினன். இந் நீதியைத் தயரதனும் நன்கு அறிவானுயினும் அதனை மறந்துதான் மாண்டு போயதின் மாசு மேலில்லையென இயம்பினன். இக்கருத்தை,

சினக்குறும் பெறிந்தெழு காமத் தீயவித்
தினக்குறும் பிபாயையு மெற்றி யாவர்க்கு
மனக்குறு நெறிசெலும் வள்ளி போய்மறச்
தனக்குறு நெறிசெல லொழிக்கின் பாலதோ.

[கோபமாகிய பகையை ஒட்டி, எழுகின்ற காமத்தீயை அவித்து அவைகளுக்கு இனமாய மயக்கத்தால் வரும் எல்லாவற்றையும் அழித்து யாவருக்கும் அவரவர் மனத்தினது மாண்புக்கு ஏற்றபடி உதவிகின்ற வள்ளலே, நீ மறந்து உனக்கேற்ற வழியைத் தேடிக்கொண்டு செல்வது செவ்விய வொழுக்க மாகுமோ.]

என வரும் பாசுரத்தில் தெளிவடைகின்றது. காம வெகுளி மயக்கங்கள் அற்றவனுய்த் தயரதமன்னவன் அமைந்திருந்த தன்மையால் யாவரும் தத்தம் மனமாண்பு பெற்ற செவ்வியர் ஆயது பரதனுல் இங்குக் குறிக்கப்படுகின்றது. கையெடுத்துக் கொடுக்காமல் அளிக்கின்ற வள்ளலும் தயரதன் ஆயினன். தனக்குரிய வண்மையை அவன் மறந்தாலன்றி மாய்க்திரான் என்பது நிச்சயம்.

நீதியை மறப்பினும் மன்னவன் வண்மையை மறப்பினும் ஒருபோதும் மறக்கலாகாதது ஒன்றிருக்க எவ் வண்ணம் இவன் ஏகினன் எனப் பேதுறுவானை பரதன்,

முதலவன் முதலிய மூன்றை போர்பழங்
கதையையும் புதுக்கிய தலைவன் கண்ணுடை
நுதலவன் சிலிவிலி ஞெண்மை நூறிய
புதல்வனே யெங்ஙனம் பிரிந்து போயினப்.

[நம் குலத்து முதல்வனுகிய சூரியன் முதல் எனையமுன்னேயோர் புரிந்த ஆற்றல் அறம் அருள் முதலிய சரித்திரங்களே யெல்லாம் தான் மறுபடி புதிப்பித்துக் காட்டிய தலைவனும், நெற்றிக் கண்ணுடைய பரமசிவனது மலைபோன்ற வில்லின் வலிமையை அழித்தவனுமாகிய அப்புதல்வனை எப்படி நீ பிரிந்து போயினப்.]

என உறுபொருள் ஒன்று வினவுகின்றுன். அறத்தையும் அருளையுமே அல்லாமல் இராமனையும் விட்டுத் தயரதன் ஏகுதற்குரிய நோக்கம் இரவலற்கு ஈதலே ஆகலாம். ஆதலின், பின்னரும் பரதன்

செல்வழி யுருட்டிய திகிரி மன்னவ
வெல்வழி மரபினு மிரவ லாளர்மற்
றில்வழி யுலகினி லின்மை நண்பினே
ரல்லழி யுலகினு ளுளர்கொ லோவையா.

[நேர்மையாகச் சக்கிரம் செலுத்திய மன்னவனே, இவ்வுலகில் யாவரும் ஒருவழி அல்லாக்கால் ஒருவழி இரந்தொன்று உன்னிடத்தில் பெற்றுவிட்டார்களாதலின் இனி இங்கு உன்னுடைய நட்பிற்கு உரியராக வேறு இரவலர் இல்லையென்று, அவ்வானுலகிலேனும் சிலர் இருக்கலாம் எனத் தேடிச் சென்றனையோ.]

என்று பரிவுடன் பரிகசிக்கின்றவன்போல் புலம்புகின்றுன். இரப்போர்கடலையெல்லாம் ஈந்தேதகடர்துவிட்ட தயரதன் மற்று, கொள்வோர் வேண்டி விண்ணுடு சென்றிடினும் என்? குன்றளிக்கும் குலமணித்தோட் சம்பரனை வேரோடும் தொலைத்து இவன் கொண்டு அன்று அளித்த அரசன்றே புரந்தரன் இன்று ஆள்வது. மற்று இன்தளிர்க் கற்பக நறுந்தேன் இடைதுளிக்கும் நிழல் இருக்கைக்குத்தானே விழைந்துதானே விண்ணுடு சென்றபரிசென ஐயுற்று,

பற்பக னிழற்றுகின் கவிதை பாய்நிழ
னிற்பன பல்லுயி ருணங்க நீகெடும்
கற்பக நறுநிழல் காத லித்தியோ
மற்பக மலர்ந்தோண் மன்னர் மன்னனே.

[மற்போர் விளங்கும் அகன்ற தோளையுடைய சக்ரவர்த்தியே, அனேக காலமாக நிழல் செய்யும் உனது குடையிலிருந்து வருகின்ற நிழலில் தங்கிய எல்லா வுயிர்களும் வாட்டமடையும்படி விட்டுவிட்டு நீ பெரிய கற்பகமரத்தின் நல்ல மணமுள்ள நிழலை விரும்பினையோ]

எனக் கேட்டு அச்செய்கையிலடங்கிய சுயநயத்தையும் எடுத்துக் காட்டுகின்றுன். ஆயினும் வருத்தத்தின் வேகத்தால் விளம்பியதேயன்றி தயரதன்பால் பரதன் அதனை ஒருபோதும் நம்பமாட்டான். பொன்னுடும் தன்கொடையே ஆனலும் சரண்புகுந்தோரைக் காப்பதற்கு விரைந்த இவன் ஏகினவனுகினும் ஆகலாமென,

இம்பர்நின் றேகினை யிருக்குஞ் சார்பிழந்
தும்பர்வந் தன்கழ லொதுங்கி னுர்கொலாஞ்
சம்பர னனையவத் தானைத் தானவ
ரம்பரத் தின்னமு முளர்கொ லாமையா.

[ஐயனே, சம்பராசுரனைப் போன்ற சேனைப் பலமுடைய அசுரர்கள் வானத்தில் இன்னும் இருக்கின்றரோ. அவர்களால் தேவர்கள் பின்னர் தம்மிருக்கையை இழந்து வந்து உன்பாதங்களில் சரணம் புகுந்தனரோ. அத்தேவர்களைக் காக்கத்தான் நீ இவ் வுலகுவிட்டு ஏகினையோ]

என்று ஐயுறுகின்றனன். ஆயினும் கைகேயி உடன் செல்வதின்றி இவனெதிர் இன்று நின்றுளாதலின் அதுவும் அமையாதெனத் துணிந்தனன்போல் பரதன் வேறேர் காரணம் தேடுவானுகி,

ஏழுயர் மதகளிற் றிறைவ வேகினை
வாழிய கரியவன் வறியன் கையெனப்
பாழியம் புயத்துகின் பணியி னீங்கிலா
வாழியை யினியவற் களிக்க வெண்ணினோ.

[ஏழுமுழம் உயர்ந்த மதயானைகளையுடைய தலைவனே, உன் கரிய செம்மல் வெறுங்கையனும் இருக்கின்றுன் எனக் கருதி வலிமைபொருந்திய அழகிய உன் கையிலிருந்து உன் ஆக்கினையைக் கடவாத சக்கரத்தை இனி அவனுக்குக் கொடுக்க எண்ணித்தானே நீ எழுஞய்]

எனப் புலம்புகின்றனன். எனினும் அது கருத்தாயின் அவன் இறந்து தீரவேண்டுமென்பது இன்றியமையாததன்றே. உயிருடனிருக்கும் இங்ஙனிலேலிய இராகவன் கையில் செங்கோலையும் திகிரியையும் சேர்ப்பித்திருக்கலாமே. ஆதலின்

பற்றிலை தவத்தினிற் பயந்த மைந்தற்கு
முற்றுல களித்தது முறையி னெய்திய
கொற்றவன் முடிமணக் கோலங் காணவும்
பெற்றிலை போலுகின் பெரிய கண்களால்

[நீ பெற்ற பிள்ளைக்கு உலகமுழுவதையும் அளித்து முறைமைப்படி அவன் கொற்றவனுக முடிதரிக்கின்ற பட்டாபிஷேக கோலத்தை உன் பெரிய கண்களால் காண்கின்ற பாக்கியத்தை அடையவில்லை. ஆதலால் நீ செய்த மாபெருந் தவங்களின் பயன்களில் பத்திலொன்றும் வைத்தவன் அல்லை போலும்.]

எனத் தன் தந்தையின் தன்மைக்கேற்க இம்மாபெருமைந்தன் ஐயம் நீங்கினன். மைந்தனைப் பெற்றதிலும் பற்றற முயன்ற பெரியோன் அத் தயரதன் எனப் பரதன் மதித்தது தக்கதே.

இப்படிப் புலம்ப வல்லான் பரதனே, தயரதனே அவ்வாறு புலம்பப் பெறுவதற்கும் உரியவன். கம்பர் நாடகமுறையில் நவில்கின்றுராதலின் தன் பாத்திரங்களின் இயற்கைக்கும் முன்னிய சரித்திரத்திற்கும் பின்னிய நிகழ்ச்சிகளுக்கும் பரதன் மொழிகள் சிறப்பாகப் பொருந்தவேண்டுவது அந் நாடகமுறையின் சுவைக்கு இன்றியமையாததாகின்றது. மற்றுக் கதை இன்னதென்று கூறினுற் பேதுமென்று புகல்கின்ற வான்மீக முனிவருக்கோ இக்கட்டளை யில்லையாதலால் எத்தந்தையிறந்து எம் மைந்தன் புலம்பினுலும் பொருந்தும்படியான மொழிகளால் இக்கிலையைப் பின்வருமாறு நிகழ்த்திவிட்டார்:—

'ஆ! நான் கெட்டேன்' என்று பரிதாபமாகக் கதறிக் கொண்டு பூமியில் விழுந்தார். பிறகு சோகத்தால் மூடப்பட்டும், தந்தையின் மரணத்தால் துயரப்பட்டுக் கொண்டும், கலங்கி வருந்துகின்ற அறிவை யடைந்தும் உள்ளவரும், மஹா காந்தி பொருந்தியவரும், வெற்றியாளரில் சிறந்தவருமான பரதர் தமது அழகிய முகத்தை ஆடையால் மறைத்து, 'நிர்மலமான ஆகாசம் சரத்காலத்து இரவில் சந்திரனல் விளங்குவதுபோல முன்புவிளங்கும், என் தந்தையான அழகிய இம்மஞ்சமே, புத்திமானை அவரில்லாமல் சந்திரனில்லாத ஆகாயம்போலவும், ஜலம் வற்றிய சமுத்திரம் போலவும் இப்பொழுது சோபிக்கவில்லையே' என்று குரலெடுத்துப் புலம்பிக் கண்ணீர் வடித்து மிகப் பரிதாபமடைந்தார்.

நான், 'அரசர் இராமருக்குப் பட்டாபிஷேகம் பண்ணி வைப்பார், வேள்வியைச் செய்வார்' என நினைத்து மகிழ்ந்து யாத்திரை செய்தேன். அவ்வெண்ணம் மாறுப்போக, எனக்கு விருப்பமான நன்மையைச் செய்யும் அவரைக் காணுதலால் என் மனம் பிளக்கின்றதே. நான் வந்து சேராமலிருக்கும் பொழுதே, மன்னவர் எந்த வியாதியால் உயிர் விட்டார். அவரைத் தாங்களாகவே ஈமக்கடன் செய்த இராமர் முதலியோர் பாக்கியசாலிகள். விரைந்து வந்து உச்சிமுகர்ந்து பார்ப்பவரும் எனது தந்தையுமான புகழ்பெற்ற மஹாராஜர் நான் வந்ததை உணரார். புழுதிபடிந்த என்னை அடிக்கடி தழைப்பதான வருந்தாது காரியத்தை முடிக்கும் அத்தந்தையாருடைய அந்த ஸ்பரிசம் எங்குப் போய்விட்டது. எவர் எனக்கு உடன்பிறந்தவரும் தந்தையும் சுற்றமுமோ, எவருக்கு நான் அடிமைப்பட்டிருக்கின்றேனே அவரை எனக்குச் சொல்லவேண்டும். தருமத்தை யறிந்த விவேகியான புருஷனுக்குத் தமையனர் பிதாவன்றே. ஆகையால் அவருடைய தாளைத் தழுவப் போகின்றேன். அவரன்றே இப்பொழுது எனக்குக் கதி. தருமத்தை உணர்ந்து நாடோறும் அதை நடத்தி உண்மையுடன் கொண்டநோன்பைக் கைவிடாதிருந்த என் தந்தையான மன்னவர், தமது முடிவில் எச் சங்கதியைக் கூறினர்' என்றர்.

இதன் பின்னர்ப் பரதன் ஒருவண்ணம் சிறிது தேறித் தன்னன்னையை நோக்கி,

எந்தையும் யாயுமெம் பிரானு மெம்முனு
மந்தமில் பெருங்குணத் திராம னுதலால்
வந்தனை யவன்கழல் வைத்த போதலாற்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாதென்றன்.

என்று இயம்ப, சிந்தையும் தளராது காவும் நடுங்குதலின்றி அக் கைகேசி முன்னர் மன்னவன் மாய்ந்த பெற்றியை யாதும் பொருளிலா வொன்றுபோல் உரைத்த அக் குரலிலேயே

தெவ்வடு சிலையினுய் தேவி தம்பியென்
றிவ்விரு வோரொடும் கானத் தானென்றுள்.

கேட்டான் பரதன். கேடுதான் வரும்போது ஒன்றியாய் வருவதில்லை என்பதனை ஓர்ந்து

விணைத்திறம் யாதினி விளைப்ப தின்னமும்
எணைத்துள கேட்பன தன்பம்யானென்றன்.

என்று,

ஏங்கினன் விம்மலோ டிருந்த வேந்தலப்
பூங்கழற் காவலன் வனத்துப் போயது
தீங்கிழைத் ததனிலீ தெய்வஞ் சீறியோ
வோங்கிய விதியினீ தாகி னேவென

[என்று ஏக்கங்கொண்டு மனம் வருந்தியிருந்த அப் பரதன் "வீரக்கழல் அணிந்த தாமரைபோன்ற கால்களையுடைய அந்த இராமன் காட்டிற்குச் சென்றது நீங்குசெய்த தாலோ அல்லது தெய்வம் கோபித்ததாலோ அல்லது யாவற்றினும் மேலாய விதியினுலோ அல்லது வேறு எத்தக் காரணத்தினுலோ என்று வினவினன்]

நல்லறிவாளர்க் கடையாளம் தம் புத்தி போமளவு யூகித்துப் பின் அவையல்லாமல் வேறு பிற காரணங்களும் இருக்கலாம் என்னும் அத்தகவுடைய நிலையே யாகும். வான்மீகியார பரதர், "தமது வமிசத்தின்மேன்மையைக் கருதி தமது தமையனருடைய ஒழுக்கத்திற் சந்தேகப்பட்டு வாட்டமடைந்தவராய்த்தமதுதாயைப் பார்த்து, 'இராமரால் ஓர் அந்தணனுடைய பொருளும் பறிக்கப்பட வில்லையா? பாபமற்ற தரித்திரனும்

88939

வது செல்வவானுவது இம்சிக்கப்படவில்லையா? அரசகுமாரர் பிறர் மனைவியரை விரும்பவில்லையா? சகல சாகைகளையும் அத்யயனம் பண்ணி நற்குணங்கள் வாய்ந்த அந்தணனைக் கொன்றவன்போல் தண்ட காரண்யத்திற்கு அவர் ஏன் ஓட்டப்பட்டார்,' என வினவினன்" என்னுமிடத்து, இராமன் தீங்கிழைப்ப தொன்றே காரணமாகக் கருதியதாகின்றது.

அன்றியும், ஒருநாள் இராமனுடன் பழகிய கேண்மையால் எம்பெருமான் பின்பிறந்தோர் பிழைப்பதெ வும் இழைக்கமாட்டார் எனத் துணிந்தனன் குகன். மற்று பன்னெடுநாள் பழகிய இப் பின்பிறந்தோனே இராமன் தீயன செய்திருப்பினும் இருக்கலாமென ஐயுற்றது இருவருக்கும் பெருமைபன்று. அதுவு மன்றிப் பிறன் பொருளையும் மனைவியையும் வெளிய பாலி யவன் ஆதற்கூடுமென அத்தீமைகளின் வகை களையுந்தெரியவல்லானது சூரியன்தொன்மரபிற்கே ஓர் மறு இப்பரதனுல் பொருந்தியதாகும். கம்பரது நூலில் 'தீங்கிழைத்த தகனிலை' என்னும் கேள்வி ஏனோர் இராமனுக்கு இழைத்த தீங்கைக் தழுவிய மொழிகளா யமைந்திருக்கின்றது. ஆயினும் இக் கேள்வியால் இராமனது குணத்திற்கு மாறுன சங்கை விளையுமென அஞ்சிய பரதன் மிகவிரைந்து,

தீயன விராமனே செய்யுமேலவை
தாய்செய லல்லவோ தலத்து ளோர்க்கெலாம்
போயது தாதைவிண் புக்க பின்னரோ
வாயதன் முன்னரோ வருளு வீரென்றன்

[தீய காரியங்களே இராமன் செய்வதுபோல் தோன்றி னும் அது தாய் தன் மகனுடைய நன்மையைக் கருதித் தண்டிப்பது போன்று இப்பூவுலகத்தி லுள்ளவர்க் கெல்லாம் அன்பினுலல்லவோ நிகழ்ந்திருத்தல் வேண்டும். இராமன் வனத்திற்குச் சென்றது என் தந்தை விண் அடைவ தற்கு முன்னே பின்னே சொல்லி அருள்வீர்]

என வினவினன். இதனுல் வான்மீகத்தில் வந்த பரதன் மீண்டும் இந்நூலின்கண் வரும்போது தம் மரபிற்கும் பெருமைக்கும் இணங்கியவாறு தன்னைத் திருத்திக்கொள்கின்றனன். கம்பருடைய மனத்தில் வான்மீகருடைய வாக்கியங்கள் இருந்திருக்கவேண்டு மென்பது, பின் கைகேயி

குருக்களே யிகழ்தலி னன்று கூறிய
செருக்கினு லன்றெரு தெய்வத் தாலுமன்
றருக்களே யினையவல் வரசர் கோமக
னிருக்கவே வனத்தவ னேகி னனென்றாள்

என்னும் பாசுரத்தால் நன்கு விளங்குகின்றது. குருக்களே இகழ்வதும் செருக்கும் வான்மீகத்தில் பரதன் குறித்த குற்றங்களில் அடங்கினவை. அங்கு அவன் கூறியதைத் தான் இங்கு இவள் "கூறிய செருக்கினுல்" என இயம்பியதாகக் கொள்ளவேண்டுமேயன்றி இந்நூலின்கண் பரதன் யாதும் வருத்தக் காட்டிலன். இப்படியே முதல்நூலில்வந்த வாசகங்களே மனத்திற் கொண்டு தன் நூலில் பாத்திரங்கள் பதில் உரைக்க வைப்பது கம்பருக்குப் புதுமையன்று. முன் இராமன் நூறாண்டு ஆண்டபின் பரதன் அரசுசெய்வான் என வான்மீகர்நூலில் கைகேயி கூறிய அமைதி இக்கம்ப ருடைய நூலில் குறிக்கப்படவில்லையாயினும் "ஒரு மகற்கென்னை கொடுத்த பேரரசு, அவன் குலக்கோ மைந்தர் தமக்கும் அடுத்த நப்பிக்கும் ஆம், பிறர்க்கு ஆகுமோ" எனக் கூனி உரைத்தது அக் கைகேயி வான்மீகத்தில் கூறிய கூற்றிற்கு மறுப்பாக வந்ததென் பது ஐயமில்லை.

எனின், இராமன் வனம் சென்றதற்கும் தயரதன் வானம் சென்றதற்கும் காரணம் யாதெனப் பரதன் வினவுதலும், கைகேயி

வாக்கினுல் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்
காக்கினேன் அன்னது பொறுக்க லாமையா
னீக்கினன் றன்னுயிர் நேமி வேந்தென்றாள்

பசையற்ற நாவாற் பகர்ந்த இச் சுடுசொற்களுக் காற்றுதி தன் செவிகளைப்பொத்திய பரதன் பட்டபாடு பெரியதென்று சொல்லல் வேண்டுமோ.

களவியற் காரிகை

[794-வது பக்கத் தொடர்ச்சி]

[நிலைகூறு இளவியென்பது பாங்கன் குறியிட
த்துச் சென்ற(? று) தலைமகணிலைமை கண்டு[தலை]
மகற்குக் கூறுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

பணைத்தா ழரவரை[ச் சிற்றம் பலவர்பைம் பொற்கயி]லைப்
புணர்ந்தாங் ககன்ற பொருகரி யுன்னிப் புனத்தயலே
மணந்தாழ் பொழிற்கண்[வடிக்கண் பரப்பி மடப்பிடிவாய்
நிணந்தாழ்]சுடரிலை வேலகண் டேனென்று நின்றதுவே.

—திருக்கோவை - 34.

மின்னே ரொளிமுத்த வெண்மணன்
[மேன்விரை நாறுபுன்னைப்]
பொன்னேர் புதுமலர்த் தாய்ப்பொறி
வண்டு [முரன்று] புல்லா
மன்னே ரழிய மணற்றிவென்
றன்[கன்னி] வார்துறைவாய்த்
தன்னேரி லாத தகைத்தின்
றியான்கண்ட தாழ்பொழிலே.

—பாண்டிக்கோவை.

மண்டலம் பண்டுண்ட திண்டேர்
வரகுணன் றெண்டியின்வாய்க்
கண்டலந் தண்டுறைக் கண்டதொன்
றுண்டு கனமகரக்
குண்டலங் கெண்டை யிரண்டொடுங்
கொண்டு.....ஓர் திங்கள்
மண்டலம் வண்டலம் பக்கொண்ட
சூழ வருகின்றதே.

—பழம்பாட்டு.

ஆய்தளிர் பொதுளிய வீததை
காய்கதிர் நுழையாக் கடிபொழில்
யாவையி னேரும் விழைவுறுக் தகைத்தே.

—பொருளியல்.

கோல விளக்கினிகர கொண்டா.....லலருளி
லீலவிழி பரப்பி நிற்குமால்—வேலனகண்
அல்லித் திருமங்கை கோமா னருட்கண்டன்
கொல்லிப் புனத்தயலோர் கொம்பு.

—கண்டனலங்காரம்.

செய்ய முலைமேல் வடந்திகழத் திக்கெல்லாம்
வெய்ய குவளை விழிபரப்பிப்—பைய
அளிவிளங்கு வல்லிபோ லங்கொருவா...
ஒளிவிளங்க நின்ரு ருளர். —கிளவித்தெளிவு.

அவயவம் தெளித லென்பது குறிவழிச்சென்று மீண்ட பாங்கன் நலிவிலே கூறத் தலைமகன்.....அதற்குச் செய்யுள் வருமாறு:—

எயிற்குல மூன்றிருக் தீயெய்த
வெய்தவன் றில்லையொத்துக்
குயிற்குலங் கொண்டதொண் டைக்கனி
வாய்[க்குளிர் முத்த]திரைத்
தயிற்குல வேல்கம லத்திற்
கிடத்தியன் னம்மடக்கு
மயிற்குலங் கண்டதுண் டேலது
வென்னுடை மன்னுயிரே.

—திருக்கோவை - 36.

[மலைந்தான்
[பொதி]யிலந் தேன்மலைப் பூழியன் பூலக்தை போர்
பதிவளங் கொண்டு பவளத் திடைத்தி லம்பதித்து
மதியிடந் தன்னிற்.....லுத்தியோர் வஞ்சி நின்ற
அதிசயங் கண்டனே யேயது வேயென தாருயிரே.

—பாண்டிக்கோவை.

வண்டே றியகுழலும் வா.....ளையிளங்
தண்டே றியகுழையுந் தாழ்வடமும்—கொண்டே
யிளவேய் நிகரிருக்தோ னேந்திழையை மானிற்
... ... —பழம்பாட்டு.

(உ எ)

பொழில் கண்டு வியத்த லென்பது இவ்வகை யகவம் தெளிந்த தலைமகன் முன்புகுந்த பொழி.....அதற்குச் செய்யுள் வருமாறு:—

காம்பினை யாற்களி மாமயி
லாம்நிர் மாமணியால்
வாம்பினை யால்வல்லி [யொல்குத
லான்மன்னு மம்பலவன்
பாம்பி]ணை யாக்குழை கொண்டோன்
கயிலைப் பயில்புனமுங்
தேம்பினை வார்குழ லாலெனத்
தோன்றுமென் சிந்தனைக்கே.

திருக்கோவை - 38.

[துனிதா னகல] மண் காத்துத்
தொடுபொறி யாயகொண்டற்
பனிதாழ் பருவரை மேல்வைத்த
பஞ்சவன் பாழிவென்ற
குனிதாழ் சிலைமன்ன[ன் கூடலன்]
ளுளது கூடலேப்போ
லினிதா யெனதுள்ள மெல்லாங்
குளிர்வித்த தீர்ம்பொழிலே.

—பாண்டிக்கோவை.

தனிமை நெஞ்சத்து முனிவுகண் டகற்றலின்
வினைமாண் பாவை யன்ன
புனையிழை மாதரும் போன்றதிப் பொழிலே.

—பொருளியல்.

குழைமுகத்தாற் கொங்கை மலையு மருக்கால்
விழியரிய காட்டத்தால் வென்ற—பொழிலெல்லாம்
புல்லார்ப் புறங்கண்ட கண்டன் புகாரனைய
நல்லாளே யாகு நமக்கு.

—கண்டனலங்காரம்.

முருக்கின் புதுமலரால் முல்லை நகையால்
செருக்கியெழுஞ் செவ்விள நீரூற் - குருக்கொடியா
னுன்ற குழைமுகத்தா னுனையந்த கன்னுதலைப்
போன்ற துயர்பூம் பொழில்.

—கிளவித்தெளிவு.

திருவெனவுரைத்த லென்பது பொழிலகத் தெதிர்ப் பட்ட தலைவன் தலைமகளைத் திருவென் றயிர்த்துச் சொல் லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

காவிநின் றேர்தரு கண்டர்வண் டிலைக்கண் ணுர்கமலத்
தேவியென் றேயையஞ் சென்றதன் றேயறி யச்சிறிது
மாவியன் றன்னமென் ஞெக்கிநின் வாய்திறவாவிடினென்
னுவியன் றேயமு தேயணங் கேகட் டழிகின்றதே.

—திருக்கோவை - 41.

மேவியொன்னுரைவண்மாத்துவென்றன்...மாறைவாய்த்
தேவியென் றேகின்னே யானினைக் கின்றது சேயிராய்க்
காவிவென்றகண்ணுயல்லே யேயொன்றுகட்டுரையாய்]
ஆவிசென் றுற்பெயர்ப் பாரினி யாரிவ் வகலிடத்தே.

—பாண்டிக்கோவை.

தெய்வ மாக வையுறு செஞ்சம்
பொய்யா தாயினின் [செல்வாய்] திறந்து
கிளிபுரை கிளவியாம் பெறுக
வொளியிழை மடந்தை யுயிர்பெயர்ப் பரிதே.

—பொருளியல்.

செய்ய மலரிற் றிரும[களே யென்]றுன்னை
யைய முறுகின்றே னல்லையே-லுய்ய
வுரைதக் தருளா யுயிர்வருமோ போலுல்
விரைதக்த மேனியாய் வேண்டி.

—கிளவித்தெளிவு.

.....ஆற்றுன் கிளத்த லென்பது இவ்வகை சொல் லக்கேட்டு காணினும் கண்புதைத்தாளுக்குத் தலைமகன் கூறுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

தாழச்செய் தார்முடி தன்னடிக்
கீழ்வைத் தவர்விண்ணோர்
சூழச்செய் தானம் பலங்கை
தொழாரினுள் ளந்துளங்கப்
போழச்செ[ய் யா]மல்வை வேற்கண்
புதைத்துப்பொன் னேயென்னினீ
வாழச்செய் தாய்சுற்று முற்றும்
புதைகின்னே வாணுதலே.

—திருக்கோவை - 43.

செய்தவம்பே.....வல்லகொல்லத் திருவரங்கன்
கைதவம் பேசெய்யக் காய்ந்த பிரான்கதி ரோன்மகனே
வைதவம் பேசிய வாலியு மாமாமுமுரு.....
[எய்தவம்]பேயன்ன கண்மட வீர்புதைத் தென்பயனே.

—கோயிலந்தாதி.

அரும்புடைத் தொங்கற்செங் கோலரி
கேசரி கூடலன்ன
சுரும்புடை[க் கோதைகல்]லாயெமக்
குத்துயர் செய்யுமென்றுன்
பெரும்படைக் கண்புதைத் தாய்புதைத்
தாய்க்குநின் பேரொளிசேர்
கரும்புடைத் தோளுமன் றேவென
துள்ளங் கலக்கியதே.

பாண்டிக்கோவை.

நாட்டம் புதைக்கின்ற தென்னீ மடத்தை நகைகண்டமே
லீட்டம் புகழ்வின்னன் மேவா ரெனவிங்ஙன் யான்வருந்த
வாட்டம் பயின்றுங் கலிலின் குழம்பணிக் தாகமெங்கும்
வேட்டத் தெரிகின்ற கொங்கை யென்னை மிகைசெய்
[தனே.

—பல்சந்தமாலை.

சொல்லிற் சொல்லெதிர் கொள்ளா யாழகின்
றிருமுக மிறைஞ்சினை நாணுதி கதுமெனக்
காமஞ் கைம்மிகிற் றுங்குத லெளிதோ
கொடுங்கோ ழிரும்புற நடுங்கக் குத்திப்
புலிவீளை யாடிய புலவுநாறு (கொல)வேழத்தின்
றலைமருப் பேய்ப்பக் கடைமணி சிவக்தகின்
கண்ணே கதுவ வல்ல கண்ணு

ரரண்டலே மதிலக(? மதில ராகவு) முரசுகொண்
டோம்பரண் கடந்த வடுபோர்ச் செழியன்
பெரும்பெயர்க் கூட லன்னநின்
கரும்புடைத் தோளு முடையவா லணங்கே.
—நற்றிணை - 39.

காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி[ந் தன்]ன கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெம்மே.
—பொருளியல்.

கண்டு நீலதளர்ந்தேன் காத்தருளுங் கார்வரைமற்
[புண்ட]ரிகம் வைத்தான் புகாரனையீர்—வண்டின்
இனையலம்பு தார்நீழற் கெண்டைமேல் வைத்த
வினையலம்பு செந்தா மரை. —கண்டனலங்காரம்.

வந்தெ னுடலி னுயிர்வாங்க வாணுதலாய்
சந்த வனமுலையே சாலாதோ—பைந்தளிரால்
நின்[கண் புதை]த்தனையே நின்வடிவெ லாம்புதைய
வென்கண் புதைத்தருளா யின்று.
—களவித்தெளிவு.

மருங்கணைத லென்பது.....இவ்வகை சொல்லி யாற்றுளுய தலைமகன் றலைமகட்குக் குழலுங் கோதையுந் திருத்துவானுய்ச் சென்றணைதறு.....ல்லுதல்.அதற்குச் செய்யுள் வருமாறு:—

கோலத் தனிக்கொம்ப ரும்பர்ப்புக்
கஃதே குறைப்பவர்த்தம்
சீலத் தனகொங்கை தேற்றகில்
வேஞ்சிவன் றில்லையன்னுள்
நூலொத்த நேரிடை கொய்ம்மையென்
னுதலுண் டேனசையாற்
சாலத் தகாதகண் டீர்வண்டு
காள்கொண்டை சார்வதுவே.
—திருக்கோவை - 45.

காமே யிடையுள்ள வாறறி வாமினி காங்கள்சொல்ல
லாமே மருதன் மருதவ னத்தன்ன மன்னவரைப்
பூமே லணிர்து பிழைக்கச்செய் தாரொருபொட்டுமிட்டார்
தாமே தளர்பவ ரைப்பார மேற்றுதல் தக்கதன்றே.
.....திரு[விடைமருதூர்] மும்மணிக்கோவை - 15.

சேயன வாண்மைத் திகழ்முடித் தென்னன்
.....புடைபரு டருமே
வின்னுங் குறுகுவ னிரும்பொழி லிடமே.
—பழம்பாட்டு.

இடக்கலேப்பாடு முற்றும். இவையெல்லாம்

'ஆங்கனம் புணர்ந்த கிழவோன் றன்வயிற்
பாங்க னேரிற் றறிதலேப் பெயலும்
பாங்கிலன் றமியோ னிடந்தலேப் படலுமென்
றங்க வீரண்டே தலேப்பெயன் மரபே'
—இறை - 3.

என்னுஞ் சூத்திரத்துட் கண்டுகொள்க. (உ)

29. இயற்றுஞ் செழுந்தழை யுங்கண்ணி
யுங்கொண் டிதுவெயிடத்
தயற்பின் செலவைக் குறையுற
லென்றுநல் லஞ்சனத்தோய்
கயற்கண்க ளாலும்தன் சக்கரங்
காக்குங் கதிர்முகத்தாய்
நயத்தண் டமிழ்ப்பொருட் பாவோர்
நயந்தங் கியம்பினரே.

என் - எனின், இரந்து குறையுற்றவிடத்துக் குறையுறுதலென்றுங் கிளவியொன்றும். அதுவருமாறு:—குறையுறுதலென்பது இடந்தலேப்பட்ட தலேமகன் தழையுங் கண்ணியுங் கொண்டு தோழிபின்னிலே முனியாது இரந்து நிற்றல். என்னே ?

அந்தழை யல்கு லணிநலம் புணரா
வெந்துயர் பெருக வெளிப்பட விரந்தன்று
—வேண்பாமாலே - 9.

என்றுராகலின். அதற்குச் செய்யுள் வருமாறு:—

தேமென் கிளவிதன் பங்கத் திறை[யுறைதில்லே]யன்னீர்
பூமென் றழையுமம் போதுங்கொள் ளீர்தமி யேன்புலம்ப
வாமென் றருங்கொடும்பாதகள்செய்துநங் கண்மல[ராங்]
காமன் கணைகொண் டலேசெய்ய வோமுற்றக் கற்றதுவே.
—தினக்கோவை-90.

மண்ணகங் காலா ளளந்தவன் மாறன் மலர்ப்பொழில்சூழ்
கண்ணகன் காவிரி நாடனை யீரிக் கமழ்கறவத்
தண்ணறும் போதுத் தழையுங்கொள் ளீரென்னிற்றண்டி
[யெம்மே
லெண்ணுமைங் காம சரம்படும் பட்டா லெளிவரவே.
—பாண்டிக்கோவை.

நகுதா மரைமலர் சூழ்வாவி சூழ்வச்ர நாடர்தங்கள்
வருதா புரியன்ன வாணுத லீர்மற்ற வார்தழையு
மிருகாண் மலர்களுங் கொண்மின்கள் கொள்ளா
[விடின்மதுவந்
தொருகாம னெங்கணை யாலெம தாவி துவக்குண்ணுமே.
—பல்சந்தமாலே.

கண்ணி யைச்?(ய) நிறந்தனவே தண்ணென்
பூந்தழை செவ்விய போலும் வாங்கிருங்
கூந்தலு மல்குலும் பொலிய
வேந்திளை...மின்யாம் விழைகுவம் பெரிதே.

இதற்கிலக்கணம் —பொருளியல்.

'புலரீந்த பின்றை யாங்கன மொழுகாது
[ப]ணிந்த மொழியாற் றேறி தேர்ந்திரந்து(?தேனத்து)
இரந்து குறையுறுதலும் கிழவோன் மேற்றே'
—இறை-5.(உசு)

என்னுஞ் சூத்திரத்துட் கண்டுகொள்க.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

கவனிக்க ஏமாறுதீர்

குழந்தைகளுக்கு :

ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனே மாத்திரை
சித்ர தைலம்,

"பால சுதா" (Reg.)

அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

"சுதவைத்யசாலை"நுங்கம்பாக்கம்

மதராஸ்.

டானிக்குகள்:

சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்

ஜீவஹரீதா (Reg.)

பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்
களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.

மட்ராயாவுனப்ராசா மட்பருமகாமலகதைலம் கோரோஜனே மாத்திரை

நுங்கம்பாக்கம் மட்டு

சாதாரணம்-மார்க்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மட்ட.மெடிகேட்-டப்பி காஞ்சீபுரம்

பிரான்ச்:
மதுரை.

யாப்பிலக்கணம்

செய்யுள்—கலிப்பா

[789-வது பக்கத் தொடர்ச்சி]

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

நேரசை ஒத்தாழிசைக்கலிப்பாவில் அம்போதரங் கம் என்னும் உறப்புச் சேருமாயின் அது அம் போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா ஆவதுபோல், அம் போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவில் அராகம் என்னும்உறப்புச் சேருமாயின் அது வண்ணக ஒத் தாழிசைக் கலிப்பா என்னலாகும். அராகம் என்பது ஒரு பொருளின் வர்ணனையைக் கூறும் பாகமென்றும், வர்ணித்துக்காட்டலால் அதற்கு வண்ணகம் என்ற பெயருண்டென்றும், ஒவ்வொரு வர்ணனையை உள் ளடக்கி முடிவது ஒவ்வோர் அராகம் என்றும், அத் தகைய அராகம் ஒவ்வொன்றும் நான்கிற்குக் குறை யாமல் பதின்மூன்றிற்குமேற்படாமல் சீர்களே உடைய அடிகள் ஆகலாம் என்றும், அத்தகைய ஓரடி அரா கங்கள் நான்குமுதல் எட்டேனும் அல்லது ஈரடி அராகங்கள் நான்கேனும் வரலாமென்றும், இவ்வரா கத்தில் வரும் சீர்கள் மாத்திரை மிகுவதும் குறை வதுமின்றி நடக்கும் கருவிளஞ்சீர்களாய்ப் பெரும் பாலு மிருக்குமென்றும் ஆதலின் இவ்வுறப்பிற்கு முடுகியல் என்ற ஒரு பெயரும் உளதென்றும், முன் னரே கூறியிருக்கின்றேம். அராகம் என்னுமிவ் வுறப்புத் தாழிசைகளுக்குப் பின்னும் அம்போதரங் கங்களுக்கு முன்னும் வரும்.

நரை [புனிதத்
பூமாது நிழன்மணிப்பூண் பொதியவிழ்பொன் னிதழ்ப்
தேமாலே நறுங்களபஞ் செறிமார்பத் திடைமுயங்க
அளப்பரிதாம் பகிரண்டத் தப்புறமு மகத்தடக்கி
உலப்பிலிளம் கதிருதயத் தொளிகிளர்பே ருருவாயு
ணன்னரங்கத் தணுக்கடொறு நயந்தணுவா யியுமெழில்கூர்
தென்னரங்கத் தரவணைமேற் றெளிர்திருக்கண் வளர்ந்
[தளாய்

தாழிசை

1

ஒருசுடராஞ் சொரூபமுட னுருபமைந் தொருசுடரோ
டிருசுடராய்க் குணமொருமூன் றெனலாகி முறைமுறையே
படைப்பதையு மழிப்பதையும் புறம்போக்கிப் பழிபிறங்கா
திடைப்படுகா வலேகினதென் றெடுத்தகெவ னருளுதியே.

2

நின்றனவா யியங்கினவாய் நீடியபல் லுருவளித்தோன்
பொன்றியநா ளெழுந்தபெரும் புனற்படிந்த வுயிர்களேநீ
யெம்மானே திருவுதரத் திருத்தியகா லவற்கவற்றூற்
கைம்மாறுக் கெவனேமுன் கைக்கொண்ட தருளுதியே.

3

புறம்பயின்ற வினைவழிசார் போக்குவர வினும்பிரியா
தறம்பயின்ற தணுவுளதே லதற்கவற்றை யெடுத்தணையா
புண்ணீர்மை யற்றனமாய்த் துறுகாகப் புரிவதரீ இயக்
கண்ணீர்கொண் டகன்றகலாக் காவலெவ னருளிதியே.

அராகம்

1

தாணியி லெவரொடு முரணிய பெருவிற
விரணிய வரனெனு மரணற விகலினை

2

ஒருபது செமுட னிருபது கரமுள
திருதன துவிர்மிசை பொருகணை சிதறிச்

3

மறையவ ரிறையல ருறைவயின் வடுவுரை
பறைபவ னுயிர்புகு மறைகழ லிணையினை

4

முகலெயி னிடருறு மதமலே மடிவினு
ளுதவுக வெனுமுரை யதலெடு முதவினை.

(இவை கருவிளம் சீர்களால் முடிதி நடக்கின்ற அளவடிகள் இரண்டடைய அராகங்கள் நான்கு.)

அம்போதரங்கம்

பேரெண்:—

1. வஞ்சனேயோர் வடிவெடுத்து மாதலனு மறைபயின்ற
கஞ்சனேக்கொன் றுரகேசன் கடும்பொறையைத் தவிர்த்
[தனேயே.
2. குருகுலத்தார் நூற்றுவரைக் கூற்றுவனுட் டினிலிருத்தித்
தருமன்முத லவர்க்கவனி தனியாளக் கொடுத்தனேயே.

அளவெண்:—

1. கழிபெருங்கற் பினளாடை கழியாம னயர்தனேயே.
2. வழிபடுக்து தனுமாதி மடக்கோலே சுமர்த்தனேயே.
3. கதிபாண்டன் றனக்கழியாத் தனியாடளித்தனேயே.
4. விதிகாண்டற் கெண்ணிலபல் வேடமவை கொண்ட
[னேயே.

இடையெண்:—

1. தாடகை யுடலுயிர் போக்கினே.
2. தாபதன் மனதிடர் நீக்கினே.
3. நீடக னிகைபழி தீர்த்தனே.
4. நேசமுள் ளவனெடு சேர்த்தனே.
5. வில்லினே மிதிலேயில் வளைத்தனே.
6. மெல்லிய விளமுலே தளைத்தனே.
7. வல்லர வடல்கெட நடித்தனே.
8. மருதினே முதலொடு முடித்தனே.

சிற்றெண்:—

1. உறித்தயிர் கட்டுண்டனேயே.
2. உரலிடை கட்டுண்டனேயே.
3. மறித்துகிரை காத்தனேயே.
4. வழங்கினேயைக் காத்தனேயே.
5. குடநடமுன் பாடினேயே.
6. குழலினிற்பண் பாடினேயே.
7. படர்சகடம் பொடித்தனேயே.
8. பகட்டிமருப் பொடித்தனேயே.
9. நாவலன்பின் நடந்தனேயே.
10. நடித்தனேமன் னடந்தனேயே.
11. கோவலரில் வீருத்தனேயே.
12. கௌவிடையே ழிறுத்தனேயே.
13. புள்ளின்வா யிடந்தனேயே.
14. புரந்தனேயா ரிடந்தனேயே.
15. தெள்ளமுதங் கடைந்தனேயே.
16. தேவருளம் கடைந்தனேயே.

தனிச்சொல்
எனவாங்கு
சுரிதகம்

இனேயதன் மையவா மெண்ணருங் குணத்தி
னினேவருங் காவ னிகழ்த்தினே யதனு
ளின்னதி கருணேயு நீயு
னுவுடன் வாழிவா ழியவே.
—மாறன் பரப் பாவினும்.



இப்பாட்டு முன்னுரைத்த இலக்கணத்தின்படி எல்லாவுறுப்புக்களையும் முறையே பெற்ற வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. இதனில் நாற்சீரடி இரண்டி ரண்டு கொண்ட அராகங்கள் நான்கு வந்திருக்கின் றன. இவை ஒவ்வொன்றும் அடியெதுகை அமையப் பெற்றிருத்தலால் இரண்டடியுடைய அராகம் ஒன்று எனக் கொள்ளவேண்டுமேயன்றி எண்சீருடைய ஓரடி அராகங்கள் என்று கொள்வதற்கில்லை.

இங்குக் காட்டிய வுறுப்புக்களில் சிற்சில பிறழ்ந் தும் மாறியும் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா வரா குமென்று கொள்வார் ஒருசாரார். அவைகளை விரிக் கிற் பெருகும். மாணவருக்கு அத்துணை அவசியமு மில்லை. அவ்வாறு வரக்கூடிய வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாக்களில் ஒன்று உதாரணமாய்க் காட்டலாம்.

தரவு

சிலம்பொலிக்கு மிணையடியுஞ் செறிகுறங்கும் பணைத் தலம்புகழ்தற் கரிதாய நகைமுகமும் புரிகுழலும் [தோளும்
இலங்கிழையாற் பொலிவுற்ற வெழிலிறமு மிவைகவற்ற வந்தணனு யறமொரீஇ யணியிழைதன் பணிபிழைத்து
முந்துணரான் பிரிவாற்ற முகிலுறங்கு மணிவரைமேல் வந்தவிழ்ந்த மலரயலுய் வரம்வேண்ட வருளியோய்

[இது எல்லாச் சீர்களும் வெண்சீர்களாய்க் கலித் தளை பெற்று அளவடிகள் ஆறுகொண்டு வந்த தரவு]

தாழிசை.

1

போதிவரு மலர்ப்பிண்டிப் புங்கவன்ற னறநெறியைத் நீதகல மிசைபெருகத் திருநலமு மொருமனத்தாற் பேதிவரும் பிறவிகளைப் பிரித்தருளு கெனவணங்கிக் காதிவரு மணிக்குழையாய் கடவுளடி யடைந்தனையே

2

மதுவார்ந்த மலர்ப்பிண்டி மாதவன தருணெறியைக் கதுவாய்ப்பட் டியலாமை கழிகாவன் மிகைபூண்டு பொதுவாய்வண் டறைசோலைப் பொழிலணியுஞ் சந் [தத்து
ளிதுவாகு மறநெறியென் றினிதமர்ந்த வியப்பினையே

3

தேனுலா மலர்ப்பிண்டித் தேவர்கோன் றிருந்தடியை வானுலா மமரர்களும் விஞ்சையரும் வந்தேத்த வூனுலா முடம்பெய்தி யுச்சந்த மால்வரைமேல் வேனிலான் மனங்கனல விதூடகனை விரும்பினையே.

[இவை நான்கடியால் வந்த தாழிசை மூன்று]

தனிச்சொல்

எனவாங்கு

[இது, இதுகாறும் கண்ட மற்றக் கலிப்பாக்களைப் போலன்றித் தாழிசைக்குப் பின் வந்ததோர் தனிச் சொல்.]

அராகம்

1. அணிகிளர் தகிலல்குல் மணிமலி கலையினை.
2. பணிமொழி நினதருள் பலரிவ ணருளென மருள்குவை.
3. கறையற துறவுடை யிறைவன திருவடி கவவுறு காதலே.
4. முறையற முழுவது மலிபொரு ணிலைமையை மலமற வுணர்தலு மகிழ்ந்தனை.
5. திருமலர் களுலிய சிகழிகை திகழ்தரு மணிமலி மகரமு மறவறு திலகமு மணிந்தனை.
6. முழுமதி யிதுவென முதுபுதன் மதுவிரி திருமல ரிதுவென மொழியினு மளியின மிகலிய முகத்தினை.
7. நகையென மினலென நளிர்சுட ரொளியென வகையமை யமிழ்தென வளைகடன் மணியென முகைவிரி மலரென முறுவலே.
8. குழலென வமிழ்தென நனியினி களியென மலியொலி மருவிய மலருறை மிஞ்றென மகிழ்தரு குயிலென மழலைய மொழியினை.
9. பெறலரு மரபின திருவம ரருண்மொழி யுருவரு ணூறுவர்க ளொழிவிலர் வினவலின் மருளற வருளிய வறிவன தருண்மொழி மகிழ்ந்தனை.

[இவை,நான்கு சீர்முதல் பதின்மூன்றுசீர்வரையில் வெவ்வேறு அளவாய் வந்த அராகவடிகள். அராகத் திற்குப் பேரெல்லை எட்டடிகளேயாயினும் இதனில் ஒன்பது அடிகள் வந்துள. ஆயினும் யாப்பருங்கல விருத்தியின்கண் இதனை எட்டடி அராகம் என்று குறித்திருக்கின்ற காரணம் விளங்கவில்லை.]

அம்போதரங்கம்.

பேரெண்:—

1. குரும்பையும் பொற்செப்பும் கோங்கி னரும்பும் விரும்பின வீங்கு முலை.
2. முலைத்தலைச் செஞ்சுணங்கு வேங்கை மலரோ டலைத்தனை வம்பொற் பிதிர்.

[நாற்சீரடி இரண்டிரண்டு கொண்டு பேரெண் அமைவது இயற்கையாயினும் இங்கு நாற்சீரும் மூச்சீருமாய் ஒவ்வொரு பேரெண் அம்போதரங்கமும் ஒரு குறள் வெண்பாவாக அமைந்திருத்தல் காண்க.]

இடையெண்:—

1. மணிபுனைந்த முடியினை நீ
2. மானிகரு நோக்கினை நீ
3. அணிபுனைந்த அல்குலை நீ
4. அரும்பிரு முலுவலை நீ
5. காதணிந்த குழையினை நீ
6. கதப்பணிந்த கன்னியை நீ
7. போதணிந்த குழலினை நீ
8. பொருவரிய புகழினை நீ

[இவை மூச்சீரடிகள் (நீ என்னும் ஈற்றுச்சீர் அசைச்சீர்) எட்டுக்கொண்ட இடையெண் அம்போ தரங்கம். — அளவெண்ணும் சிற்றெண்ணும் இச் செய்யுளில் இல்லாமை காண்க. அல்லது நீ என்னும் ஈற்றை ஓரசைச் சீராகப் பிரிக்காமல், முன் சீரோடு 'மணிபுனைந்த முடியினை நீ' என்பதுபோல் எல்லா அடிகளினும் சேர்த்துவிட்டால் இதுவே சிற்றெண் ஆகிவிடும்.

தனிச்சொல்.

அதனால்

(முன்வந்த தனிச்சொல்லல்லாது சுரிதகத்திற்குமுன் மீண்டுமோர்முறை வந்தது.)

சுரிதகம்

அருணெறி பயந்த வறிவரு ளறிவன்
பொருணெறி புகன்ற வாய்மொழி வழாது
குணந்துறை போகிய வெண்ணரும் பெருமை
கணந்துறை போகிய காவலன் கண்ணி
யுலவுபுக ழுரவோன் றிருநகர்
நிலவி யெம்மிடர் நீக்குமதி னீயே.

[இது ஆறு அடியில் முடிந்த நேரிசை ஆசிரியச் சுரிதகம்.]

இப்படிச் சில அம்போதரங்க உறுப்புக்கள் குறைந் தும் வரும் வண்ணகலத்தாழிசைக் கலிப்பாக்களும் உளவென்று கொள்க.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[792-வதுபக்கத் தொடர்ச்சி]

5. மந்திரசாலைச் சருக்கம்

399. என்முத லிருபத்தீ ரிருவர் நாதர்கள்
நின்முத லீறு வகையர் நேமியர்
மன்முதல் பலவர்கே சவர்கண் மாற்றவர்
தொன்முத லவர்தொகை ஒன்ப தொன்பதே.

என் முதல் - என்னை மூலபுருஷனைக்கொண்டு தோன்றிய, நாதர்கள்-தீர்த்தங்கரர், இருபத்து ஈர் இரு வர்-விருஷபர் முதல் வர்த்தமானர் இறுதியாக இரு பத்து நால்வர் ஆவர். நேமியர்- சக்கரவர்த்திகள், நின் முதல் ஈர் அறுவகையர் - உன்னை ஆதி புருஷனைக் கொண்டு தோன்றியவர் பன்னிரண்டுவகையினர் ஆவர். மன்முதல் கேசவர் பலவர் - அரசர்களில் முதன்மைய ரான கேசவர் அநேகராவார். மற்று அவர் தொல் முத லவர் தொகை-அவருடைய பழைமையான முன்னோர் தொகை, ஒன்பது ஒன்பதே - பதினெட்டாகும்.

மாற்று - மற்று (செய்யுள் விகாரம்)

400. மன்னவ நின்மகன் மரிசி மாற்றிடைப்
பொன்னவிர் போதன முடைய பூங்கழற்
கொன்னவில் வேலவன் குலத்துட் டோன்றினுல்
அன்னவன் கேசவர்க் காதி யாகுமே. 163.

மன்னவ - மன்னவனே, நின்மகன் மரிசி - நின் மகனுகிய மரிசியென்னும், இடை - பல பிறப்புக்களின் இடையிலே, பொன் அவிர் போதனம் உடைய - பொன்னுல் விளங்கும் போதன நகரத்தை ஆளும், பூ கழல் கொல் நவில் வேலவன் குலத்துள் - பொலி வுற்ற வீரக்கழலையும் கொலைத்தொழிலைச் செய்யும் வேலையும் உடைய அரசனுடைய குலத்தில், தோன்றி னுல் - பிறந்திடுவான் அப்படிப் பிறந்தால், அன்ன வன் - அவன், கேசவர்க்கு ஆதி ஆகும் - கேசவர்க்கு மூலபுருஷனுவான்.

மாற்று - (விகாரம்) மற்றுஃ அசை.

401. கேசவ னுக்கிறங் கிளப்பின் வெண்மலை
காசறு வனப்பினேர் கன்னி யேதுவா
ஆசற வச்சுவக் கிரீவ னுயிரும்
தேசறு திகிரியுஞ் செல்வன் வௌவுமே. 164.

கேசவன் ஆம்திறம் இளப்பின் - அன்னவன் கேச வர் குலமுதல்வனுகும் திறத்தைச் சொல்வோமானுல், (அவன்) வெண்மலை - தென்சேடியி லுள்ள, காசு அறு வனப்பின் ஓர் கன்னி ஏதுவா - குற்றமற்ற அழகினையுடைய ஒப்பற்ற ஒருகன்னிகையின் காரண மாக, அச்சுவக்கிரீவன் ஆவியும் தேசு அறு திகிரியும் - வடசேடியினரசனை அச்சுவக்கிரீவனது உயிரையும் ஒளியற்ற திகிரிபையும், ஆசு அற செல்வன் வௌவும் பாக்கியில்லாமல் முழுதையும் நன்றாகக்கவர்ந்துகொள் வான்.

402. தேரணி கடற்படைத் திவிட்டன் சென்றபின்
ஆரணி அறக்கதி ராழி நாதனும்
பாரணி பெரும்புகழ்ப் பரத னென்றனன்
சீரணி திருமொழித் தேவ தேவனே. 165.

சீர் அணி திருமொழி தேவதேவன்-சிறப்புற்றேரங் கிய ஆகமத்தை அருளிய தேவதேவன், பார் அணி பெரும்புகழ் பரத - பூமிக்கு அணியெனத்தக்க பெரும் புகழையுடைய பரதனே, தேர் அணி கடல் படை திவிட்டன் - தேரின் வரிசையோடு கூடிய சது ரங்க சேனைக் கடலையுடைய திவிட்டன், பின்சென்று- இப்பிறப்பின் இறுதியில் விண்ணுலகஞ் சேர்ந்து, ஆர் அணி அறக்கதிர் ஆழி நாதன் ஆம் - ஆத்தி மாலையை அணிந்த ஒளி பொருந்திய தருமசக்கரத் துக்கு நாதன் ஆவான், என்றனன்—என்று சொன் னன்.

403. ஆதியு மந்தமு நடுவு நம்மதே
ஓதநீ ருலகுடை யுரிமை யென்றரோ
காதுவே லரசர்கோக் களிப்புற் றுனிது
போதுசே ரலங்கலாய் புராண நீர்மையே. 166

போதுசேர் அலங்கலாய் - பூவால்கட்டிய மாலையை உடைய மன்னனே, ஆதியும் அந்தமும் நடுவும் - ஆரம்பத்திலும் நடுவிலும் முடிவிலும், ஓதநீர் உல குடை உரிமை - கடல் சூழ்ந்த உலகத்தை ஆளும் அரசுரிமை, நம்மதே - நம்முடையதே, என்று - என்று அறிந்து, காதுவேல் அரசர் கோ - கொல்லும் வேலேயேந்திய அரசர்களுக்கரசனை பரதன், களிப் புற்றான் - மிகவும் மகிழ்ச்சியுற்றான். இது புராண நீர்மை - இதுவே பழைமையான ஆகமத்திற்கண்ட வரலாறு.

அரோ - அசை, புராணம் - பழைமையானது.

404. அன்னணம் புராணநூ லகத்துத் தோன்றிய
கன்னவி லிலங்குதோட் காளை யானவன்
மின்னவில் விசும்பினின் றிழிந்து வீங்குநீர்
மன்னிய வரைப்பகம் மலிரத் தோன்றினுன் 167

அன்னணம் புராணநூல் அகத்து தோன்றிய - அவ் வாறு பழைய ஆகமநூலிலே குறிக்கப்பட்ட, கல் நவில் இலங்குதோள் காளை ஆனவன் - மலையென்று உவமிக்கத்தக்க அழகு விளங்கிய தோள்களையுடைய குமரன், மின் நவில் விசும்பின் நின்று இழிந்து - மின் னல்கள் பயிலும் விண்ணுலகத்தினின்று அவதரித்து, வீங்கு நீர் மன்னிய வரைப்பு அகம் - கடலே அழி யா எல்லையாகக்கொண்ட இந்தப் பூமி, மலிர தோன் றினுன்-மகிழ்ச்சி கூருமாறு தோன்றினுன்.

405 திருவமர் சுரமைநா டணிந்து செம்பொனூர்
பொருவரு போதன முடைய பூங்கழற்
செருவமர் தோளினுன் சிறுவ ராகிய
இருவரு ளிளையவன் ஈண்டு நம்பியே. 168.

திரு அமர் சுரமை நாடு அணிந்து - சகல செல்வங் களும் பொருந்திய சுரமை யென்னும் நாட்டுக்கு அணியாகி, செம்பொன்னுல் பொருவு அரு - செம் பொன்னுல் அமைந்தமையால் ஒப்பற்ற, போதனம் உடைய - போதனம் என்னும் நகரத்தை இராஜதானி யாகக்கொண்ட, பூ கழல் - தாமரை மலரை ஒத்த பாதங்களையும், செரு அமர் தோளினுன் - போரை விரும்பும் தோள்களையும் உடையவனுனபரபதியின், சிறுவர் ஆகிய - புதல்வராகிய, இருவருள் இளையவன்- இருவருள் இளையவனே, ஈண்டு அ நம்பி - இவ்வாறு இக்கே வந்து அவதரித்த புருஷோத்தமன் ஆவான்.

திரு - திருமகளுமாம்.

1930-வது வருட வால்யூம் - பயிண்டு செய்தும் செய்யாமலும் கிடைக்கும்.

1930-வது ஆண்டு இதழ்கள் கற்போருக்கு மிகவும் பயனளிக்கவல்லது. இக்காள் மாந்தர் அல்லலே வாழ்க்கையென மயங்கிக் காற்றில்அடிபட்ட தரும்பெனப் பறக்கின்ற பரிபவம் ஈதென்றும், கற்பதின் பயன் அலேயடங்கி வாழ்தல் என்றும் விளக்குவது 1930-ஆண்டின் தலேபங்கக் கொள்கையாகும். அறியாமை வேண்டப்படும், விஷயத்திற்கேற்ற விளம்பரம், இநபக்கம் எதற்குமுளது, முயலுக்கு முயலேவேண்டா, ஒக்க நிணப்பார் உறவு, கல்லோர்கடன், விளம்பிஞல் வெட்கக்கேடு, எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலேயடங்கவேண்டாவோ, தர்க்கத்தளர்ச்சி, கல்லாதபோர்களே நல்லவர்கள், வண்டிமாடும் மாட்டவண்டியும், உரிமையாற் பெரியாகார், மானமழிந்தபின், கலேகளே மானங்காக்கும், பள்ளியிற் பழுத்தபழம், சுண்டெலி ஆற்றல், வாலின் நீளம், பெருமையின் பெருமை ஆப பல தலேப்பின்கீழ் விஷயவாய்மை விளக்கப்பட்டுளது.

அவ்வாண்டில் கம்பராமாயணம் அயோத்தியாகாண்டம் ஆரம்பமாயது. முதல் 25 இதழ்களில், மதுரை அறிஞரான ஸ்ரீமான் சோமசுந்தரபாரதியாரது 'கைகேயின் நிறையும், தசரதன் குறையும்' என்னும் நூல் ஆயப்பட்டுளது. இது கற்றோர்க்கு நல்விருந்தாகும். அறமே நினைத்தும் ஆற்றுவார் இன்னல், கவியைக் கடந்த கருத்து முளதோ, அமரர்க்கோர் கருவியே கேகயி ஆயினுள், அறத்தினைக் காக்கவோ வரத்தினை வேண்டினுள், கூனியை ஏற்றிய கோபுரமிதுவோ, மன்னவன் புகழைக் கொன்றோ மாதராள் பழியைக்காத்தல், என்னும் தலேப்புக்கள் பலவற்றின்கீழ் பாரதிபார்நூல் ஆயப்பட்டுளது. கம்பர் வருக்கும் அமைச்சின் பெருமை ஈதென்று, வள்ளுவர்துணை கொண்டும் விபாதர் உரைகொண்டும் விளக்கப்பட்டுளது. கம்பராமாயணத்தை ஆழ்ந்து படிப்பவர்க்குக் கலாநிலயத்தில் வரையலாகின்ற கட்டுரைகள் பயன் பெரிதளிக்கும்.

இவ்வாண்டில் இலக்கணம் கற்க விரும்புவார்க்கென்று புணரியல் முழுதும் எளியதாகும் வழியில் 50 இதழ்களில் வந்துளது. முயன்று படிப்போர் எளிதில் இலக்கணத்தைக் கற்றுவிடலாம். இலக்கண வல்லுநர்க்கும் எழும் பல சந்தேகங்கள் இங்கு தெளிபவைக்கப்பட்டுள்ளன.

இவ்வாண்டில் குறுந்தொகையென்னும் சிறந்த சங்கநூல் உரையுடன் பதிப்பிக்கப் பெற்றுளது. குறுந்தொகைஇப்பொழுது புத்தகரூபமாக இல்லேயாதலால் இவ்வாண்டு இதழ்கள் அக்குறையைப் பூர்த்திசெய்கின்றது.

இலஞ்சிப்பாவை என்ற காவலும், ஆச்சரிய சூடாமணி என்னும் நாடகமும் மானத சாத்திரமும், மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் வந்துள்ளன.

விலே விபரம்:—

	உள்நாடு	வெளிநாடு
பைண்டு செய்யாதது	7—8—0	9—0—0
காலிகோ கில்ட்	8—8—0	10—0—0
அறை தோல் கில்ட்	9—0—0	10—8—0

புத்தகம் வேண்டுவோர் முன்பணம் அனுப்பி, தங்கள் ஊர் ரயில்வேஸ்டேஷனையும் தெரிவித்தால் To pay போட்டு ரயில்வே பார்சலாக அனுப்புவோம். ரயில்வே கட்டணமும் புத்தகம் ஒன்றிற்கு அணு6க்கு மேல் ஆகாது. ரயில் இல்லாத ஊருக்கு போஸ்டில் அனுப்பத் தபால் செலவு ரூ. 2 ஆகும். வேண்டுவோர் புத்தக விலேயோடு தபால்செலவுக்கென ரூ 2 சேர்த்து அனுப்பவேண்டும். பர்மா ஜிலோன் முதலிய விடங்களுக்கு ரயிலில் அனுப்ப இயலாது. பினாங் சிங்கப்பூர் மலேயா முதலிய வெளிநாட்டிலிருப்பவர் தபால் செலவிற்காகப் புத்தகம் ஒன்றிற்கு ரூ 3 சேர்த்து அனுப்பவேண்டும்.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

ஸ்தாபித்தது] நாஷனல் [1906.

இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடேட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்வில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலேயாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

1930 வருடம் நிறைவேறிய புது பிவிலினெஸ் ரூ. 1,13,55,069.

1930 வருடத்தில் அதிகமான லேப் அஸ்யூரன்ஸ் பண்டு 11,51,813.

பிரீமியம் வரும்படி 30,83,936.

1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி 7,47,608.

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லேப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலிஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமனவை. எல்லாவித லேப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

ஏஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனேக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் டைரக்ட் அண்டு ஜனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடேட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷூரன்ஸ் பில்டிங்., 7, கவுன்வில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் பைஸில் இன்ஷூரன்ஸ். கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றுவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0

வெளி நாடு ,, ரூ 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலே அணு 5. வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலேக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த ஃபிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வம் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்பேட்டை, வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

வர்த்தமானம்

இங்லாந்தில் ஜனங்கள் குடிக்கும் கள் சாராய முதலிய பானங்களுக்காக வருஷம் ஒன்றிற்கு 31 கோடிப் பொன் செலவாகின்றதென்று தெரியவருகின்றது.

***

கைத்தொழில் வளம்பெற்ற இங்கிலாந்தில் தொழிலாளர் பிரதிநிதிகள் அரசாங்கம் நடத்துகையில் 30-லட்சம் பேர் வேலேயில்லாது திண்டாடுகின்றனர் என்று லண்டன் செய்தியால் தெரியவருகின்றது.

***

மீரத் சதிவழக்கிற்காகக் கவர்ன்மெண்டின் பக்கம் வாதிப்பதற்கு லண்டனிலிருந்து ஒரு பாரிஸ்டர் வந்துள்ளனர் என்றும், பீஸ் மாதம் ஒன்றிற்கு 34 ஆயிரம் ரூபாய் என்றும், மீரத் வழக்கு நடத்துவதற்காக 50 லட்சம் ரூபா செலவாகுமென்றும் தெரிகின்றது.

***

மத்தியமாகாண மந்திரிகள் தங்கள் சம்பளத்தை 2250 ரூபாயாகக் குறைத்துக்கொண்டார் என்று ஒரு செய்தி கூறுகின்றது. சென்னையில் கவர்னர்சபை அங்கத்தினர்களும், மந்திரிகளும் சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளும் விஷயமாய் ஆலோசனை செய்துவருகின்றனர்.

***

இப்பொழுது உலகத்திலுள்ள எல்லா நாடுகளைக் காட்டிலும் பிரான்ஸ் தேசத்தில்தான் தங்கம் அதிகமாக விருக்கின்றதாம். பிரான்லிற்கு அடுத்தபடியாக அமெரிக்காவில் தங்கம் இருக்கின்றது. பிரான்லில் இப்பொழுது 465 கோடிப் பவுன் இருக்கின்றதாம்.

***

அமெரிக்கக் கோடீச்வரர்களில் முதன்மையானவரும் போர்ட் மோட்டார் வண்டிக் கம்பனியின் சொந்தக்காரருமான ஹென்ரி போர்டின் மனைவியார் மாட்டு வண்டியில்தான் பிரயாணம் செய்துவருகின்றனராம். அவருக்கு மோட்டாரில் செல்லப் பிரயம் கிடையாதாம்.

***

தற்காலம் ஏற்பட்டுள்ள பொருளாதார நிலேயை உத்தேசித்துப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களின் சம்பளங்களைக் குறைத்தனர். உத்தியோகஸ்தர்கள் சம்பளக்குறைவை ஏற்க மறுத்துக் கிளர்ச்சி செய்கின்றனர். 50,000 உத்தியோகஸ்தர்கள் கருப்புச்சட்டை அணிந்து சம்பளங் குறைத்தலேக் கண்டிக்கும் பொருட்டு ஊர்வலமாய்ச் சென்றுள்ளனர்.

***

ஜெர்மனியில் இப்பொழுது செப்ளின் என்னும் ஆகாயக் கப்பல் ஒன்று கட்டப்பெற்று வருகிறதாம். L. S. 129 என்பது அக்கப்பலின் பெயர். இக்கப்பல் 50 பிரயாணிகளேயும் 8 டன் தபால் சாமான்களேயும் 2 டன் குடி தண்ணீரையும் 60 டன் எண்ணெய் கரி முதலியவற்றையும் ஏற்றிச் செல்லக் கூடியதாம். கம்பி யில்லாத்தந்திபவர்ஸ்டேஷன் ஒன்றும் அதில்அமைக்கப்பட்டுளது. 52 படுக்கைகள் உள்ள 26 அறைகள் அதில் அமைக்கப்பட்டுள்ளனவாம். இதுவே இப் பொழுதுள்ள செப்ளின்களில் மிகப் பெரியது.

***

லண்டனிலுள்ள டெயிலி ஹெரல்டு என்னும் பத்திரிகையில் காந்தி அடிகள் எழுதிய கட்டுரையின் சுருக்கம் வருமாறு:—

'நான் எனது வாழ்க்கையில் சத்தியம் ஒரு முக்கிய மான அம்சமாய் அமையும்படி முயன்றுவருகின்றேன். எனது அரசியல் முயற்சியில் பொய் மோசம் முதலியவைகளுக்கு இடமில்லே. எத்தகைய காரியத்தைச் சாதித்துக் கொள்வதாயினும் நான் மோசம் செய்வதில்லே.

நான் முழங்கால்வரை வேஷ்டிகட்டிக்கொண்டிருப்பது ஆங்கிலேயர்களுக்கு வேடிக்கையாக விருக்கின்றது இந்தியாவிற்கு வரும் ஆங்கிலேயர்கள் இந்தியாவின் ஸீதாஷ்ணஸ்திதி அவர்களது சொந்த உடை அனுகூலமானதா யில்லாதிருந்தும் கைச்சட்டை கால் சட்டை போட்டுக்கொள்வதை விடுகிறார்களா ? அப்படியிருக்க என்னேயேன் அவர்கள் ஐரோப்பியஉடை தரிக்கும்படி கூறுகின்றனரோ தெரியவில்லே. எங்கள் ஊரில் வழங்கும் உடையையே நான் தரிக்கின்றேன். எனவே எனது ஆடைபைப்பற்றி எவரும்வியக்க வேண்டுவதில்லே.

பெண்கள், ஆண்கள் பெற்றுள உரிமை யெல்லாம் பெறவேண்டு மென்பதே எனது அபிப்பிராயம். அவர்கள் படித்து உத்தியோகம் பெறுதலேயும் நான் ஆதரிக்கின்றேன். எனது காங்கிரெஸ் வேலேயில் பெண்களேச் சகாக்களாகக் கொண்டுளதே எனது அபிப்பிராயத்தை நன்கு விளக்கும். பெண்கள் எல்லாஉரிமையும் பெறலாம் எனினும் எல்லாப்பெண்களும் ஆண்களேப்போல் படித்து உத்தியோகம் பண்ணவேண்டுமென்று நான் சொல்ல முன்வரமாட்டேன். சிலர் உத்தியோகம் பெறலாம். ஆனல் அதிக மானவர்கள் ரெஜலட்சுமிகளாய் இருப்பதை நான் விரும்புகின்றேன். குழந்தைகளேக் காப்பது அவர்களது கடனல்லவா? எனவே குடும்பம் சிறக்கப் பெண்கள் வீட்டின் அரசிகளா யிருக்கவேண்டும். இந்தியாவில் விவசாயத் தறையில் ஆண்களும் பெண்களும் வேலே செய்கின்றனர். ஆங்கிலேயர்கள் நினேக்கின்ற படியான கேவல நிலேயில் பெண்கள் இந்தியாவில் இருக்கவில்லே. பெண்களுக்கு இப்பொழுதும் சுதந்தரம் இல்லாதபாகவில்லே.

எந்த நாட்டாராகட்டும், எந்தச் சாதியாராகட்டும், எங்கே குடும்பவாழ்க்கை சிறக்குமோ அங்கு சமுகவாழ்வும் சிறக்கும். எனவே பெண்கள் குடும்பம் முன்னேறுவதற்காக, வீட்டின் தெய்வங்களாய் வாழ்ந்து, குழந்தை நல்ல முறையில் வளர்ந்து நல்ல மக்களாயும் வாழ்வதற்கு உதவிபுரிதல் வேண்டும். இதுதான் பெண்களேப்பற்றிய எனது முடிவான அபிப்பிராயம்.



KALANILAYAM.
REG. NO.: M 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்

ESTD. 1898

"ஜிவாமிருத்தம்"

பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேக பலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபாற் பெட்டி. 287. மதராஸ்.

கேட்லாக் இலவசம்

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேயன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலாநிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

ASOKA SALT

அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

(அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்றாகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோக கம்பெனி
லிமிடெட்,

சென்னை.

:: உத்தம தோழன் ::

அறியாமையினால் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழி யென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடக்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இலவசமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

— திருக்குறள் —

மூலமும் சொற்றிரிப் பகராதியும்
விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்தனது. மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

முத்தும் பவழமும்

ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் — விலை அணு 8.

சுகுணவதி அல்லது மனம்போல மாங்கல்யம் — விலை ரூபா 1.

எளிய நடையில் எழுதப்பட்ட இனிய தமிழ்ப் புத்தகங்கள். அழகிய பல ஆட்டோன் படங்கள். உயரிய பெதர்வெயிட் காகிதம். யாவரும் படித்து இன்பமடையவேண்டுமென்றே குறைந்தவிலை வைக்கப்பட்டுள்ளது.

விலாசம்:—ஸ்ரீ கிருஷ்ண பப்ளிஷிங் ஹௌஸ், மயிலாப்பூர், மதராஸ்.

நம்பிக்கையான புஸ்தக வியாபாரிகள்

தமிழ், இங்கிலீஷ் தெலுங்கு, ஹிந்தி புஸ்தகங்கள் எல்லாம் எங்களிடம் கிடைக்கும்.

தேவையான புஸ்தகங்களுக்கு கெழுதவும்.

கே. எஸ். மணியம் அண்டு கோ., புஸ்தக வியாபாரிகள், இராயப்பேட்டை, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)